# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

# அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்த செயலாக்க தணிக்கை

SUPREME AUDIT INSTITUTION OF INDIA

लोकहितार्थ सत्यनिष्ठा

Dedicated to Truth in Public Interest

**தமிழ்நாடு அரசு**

*2022ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 10*

# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

# அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்த செயலாக்க தணிக்கை

## தமிழ்நாடு அரசு

***2022ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 10***

# பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | v |
| சிறப்பம்சங்கள் | | vii |
| அத்தியாயம் I - முன்னுரை | | |
| தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி | 1.1 | 1 |
| ஒருங்கிணைந்த பள்ளி கல்வி (*Samagra Shiksha)* | 1.2 | 1 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான நிதி | 1.3 | 2 |
| நிறுவன அமைப்பு | 1.4 | 3 |
| தணிக்கையின் பரப்பு மற்றும் நோக்கங்கள் | 1.5 | 3 |
| தணிக்கை அளவுகோல்கள் | 1.6 | 4 |
| தணிக்கையின் பரப்பு | 1.7 | 4 |
| மாதிரிக்கான முறை | 1.8 | 4 |
| தணிக்கை முறைமை | 1.9 | 5 |
| ஏற்பு | 1.10 | 5 |
| அத்தியாயம் II - செயல்திறன் முடிவுகள் | | |
| சேர்க்கை | 2.1 | 7 |
| தக்கவைப்பு விகிதம் | 2.2 | 10 |
| தேர்ச்சி விழுக்காடு | 2.3 | 10 |
| பள்ளிகளில் இணை கல்விச் செயல்பாடுகள் | 2.4 | 13 |
| முடிவுரை | 2.5 | 14 |
| பரிந்துரை | 2.6 | 14 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் III - உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான பள்ளி வசதி | | |
| கல்வி வசதி அமைத்தலில் சிக்கல்களைத் தீர்ப்பதில் உள்ள குறைபாடுகள் | 3.1 | 15 |
| விதிமுறைகளை பின்பற்றாமல் பள்ளிகளை தரம் உயர்த்துதல் | 3.2 | 18 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான கைப்பிடிகளுடன் கூடிய சாய்வு பாதைகள் இல்லாதமை | 3.3 | 21 |
| முடிவுரை | 3.4 | 21 |
| பரிந்துரைகள் | 3.5 | 22 |
| அத்தியாயம் IV - பள்ளிக் கல்வியின் தரம் | | |
| பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு | 4.1 | 23 |
| மனித வளங்கள் | 4.2 | 23 |
| பள்ளி உள்கட்டமைப்பு | 4.3 | 30 |
| பிற அடிப்படை வசதிகள் | 4.4 | 37 |
| பள்ளிக் கழிவறைகளை பராமரித்தல் | 4.5 | 39 |
| பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள் | 4.6 | 40 |
| பள்ளிகளில் ஆய்வக வசதிகள் | 4.7 | 40 |
| இணைய வசதியுடன் கூடிய கணினி அறை/உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வுக்கூடம் | 4.8 | 40 |
| உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) மற்றும் விடுதிகளின் உள்கட்டமைப்பிலுள்ள குறைபாடுகள் | 4.9 | 41 |
| தளவாடங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களை கொள்முதல் செய்யாமை | 4.10 | 42 |
| பள்ளிகளில் பேரிடர் தயார்நிலை | 4.11 | 43 |
| முடிவுரை | 4.12 | 44 |
| பரிந்துரைகள் | 4.13 | 44 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் V - கல்வி வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள் | | |
| மாணவர்களை பள்ளியில் தக்கவைப்பதை உறுதி செய்வதற்கான திட்டங்கள் | 5.1 | 47 |
| மாணவர்களின் நலனுக்காக இலவசமாக பொருட்களை வழங்குதல் | 5.2 | 52 |
| முடிவுரை | 5.3 | 57 |
| பரிந்துரைகள் | 5.4 | 57 |
| அத்தியாயம் VI - கண்காணிப்பு | | |
| அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதைக் கண்காணிப்பதில் உள்ள குறைபாடுகள் | 6.1 | 59 |
| பள்ளிகளின் ஆய்வு | 6.2 | 61 |
| மாநில திட்ட இயக்குனரகத்திற்கு நிதி வழங்கப்படுவதை கண்காணிப்பதில் குறைபாடுகள் | 6.3 | 62 |
| கல்வி மேலாண்மை தகவல் அமைப்பைப் பயன்படுத்தாமை | 6.4 | 63 |
| கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பின் தரவுகளில் உள்ள முரண்பாடுகள் | 6.5 | 63 |
| முடிவுரை | 6.6 | 64 |
| பரிந்துரைகள் | 6.7 | 65 |

# இணைப்புகள்



| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1.1 | ஒன்பது மாதிரி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் பட்டியல் | 67 |
| 3.1 | சார்புப் பள்ளிகளிலிருந்து ஐந்து கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவிலுள்ள 83 உயர்நிலைப் பள்ளிகள் | 71 |
| 3.2 | சார்புப் பள்ளிகளிலிருந்து ஏழு கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவிலுள்ள 40 மேல்நிலைப் பள்ளிகள் | 74 |
| 3.3 | பள்ளிகளை தரம் உயர்த்தப்படுவதற்கான விதிமுறைகளில் தூரம் மற்றும் மாணவர் எண்ணிக்கைக்கான நெறிகளை கடைபிடிக்காத 173 உயர்நிலைப் பள்ளிகள் | 76 |
| 3.4 | பள்ளிகளை தரம் உயர்த்தப்படுவதற்கான விதிமுறைகளில் தூரம் மற்றும் மாணவர் எண்ணிக்கைக்கான நெறிகளை கடைபிடிக்காத 164 மேல்நிலைப் பள்ளிகள் | 81 |
| 3.5 | தரம் உயர்த்துவதற்க்கான விதிமுறைகளில் தூரத்திற்க்கான நெறியை கடைபிடிக்காமல் மாணவர் எண்ணிக்கைக்கான நெறியை மட்டுமே பூர்த்தி செய்த 25 உயர்நிலைப் பள்ளிகள் | 87 |
| 3.6 | மாணவர் எண்ணிக்கைக்கான நெறியை பூர்த்தி செய்து, தரம் உயர்த்துவதற்கான தூர நெறியை கடைபிடிக்காத 37 மேல்நிலைப் பள்ளிகள் | 88 |
| 3.7 | தரம் உயர்த்துவதற்கான தூர நெறியை பூர்த்தி செய்து, மாணவர் எண்ணிக்கைக்கான நெறியை கடைபிடிக்காத 77 உயர்நிலைப் பள்ளிகள் | 90 |
| 3.8 | தரம் உயர்த்துவதற்கான தூர நெறியை பூர்த்தி செய்து மாணவர் எண்ணிக்கைக்கான நெறிமுறையை கடைபிடிக்காத 39 மேல்நிலைப் பள்ளிகள் | 93 |
| 4.1 | 227 வகுப்பறைகள் பற்றாக்குறை கொண்ட 48 மாதிரிப் பள்ளிகள் | 95 |
| 6.1 | மாநில அமலாக்க சங்கத்திற்கு GoTN நிதி அளிப்பில் தாமதம் | 97 |
| | சுருக்க சொற்றொடர்களின் திரட்டு | 98 |

# முகவுரை

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் மார்ச் **2021** உடன் முடிவடைந்த ஆண்டிற்க்கான இந்த அறிக்கை, இந்திய அரசியல் அமைப்பு சட்டப் பிரிவுக் கூறு **151(2)**ன் படி**,** மாநில சட்டமன்றத்திற்கு முன் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது**.**

துறை தலைவரின் இந்த அறிக்கையானது **2016-2021** காலப்பகுதியில் “அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள்” குறித்த செயலாக்க தணிக்கையின் குறிப்புகளை உள்ளடக்கியது**.**

நவம்பர் **2021** மற்றும் மார்ச் **2022** இடைப்பட்ட காலத்தில் தணிக்கை செய்த போது அறியப்பட்ட நேர்வுகள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு பிற்பட்ட காலத்தில் அறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன**.**

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளை சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரபூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# சிறப்பம்சங்கள்

## சிறப்பம்சங்கள்

### அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்த செயலாக்க தணிக்கை

**CAG ஏன் இந்த தணிக்கையை மேற்கொண்டார்?**

கல்வியானது தனிநபர்களின் நல்வாழ்வுக்கும், சமூகத்தின் மொத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியானது, திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதன் மூலம் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கிறது. இந்த இன்றியமையாத செயல்பாட்டிற்காக அரசு, ஆண்டுக்கு ₹ 17,000 கோடி செலவிடுகிறது. மேலும், கல்விக்கான வழி வாய்ப்பு மற்றும் தரத்தை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இதன் முக்கியத்துவம் மற்றும் நிதி செலவினத்தைக் கருத்தில் கொண்டு, 2016-21 வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய இந்த செயலாக்கத் தணிக்கையை, பின் வருவனவற்றை மதிப்பிடுவதற்க்காக CAG மேற்கொண்டார்: (1) பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கு போதுமான பள்ளி வசதி உள்ளதா? (2) அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு (infrastructure) மற்றும் மனிதவளம் (human resource) வழங்கப்பட்டுள்ளதா மற்றும் (3) இலவசக் கல்வி மற்றும் பிற பொருட்களை இலவசமாக வழங்குவதற்கான திட்டங்களும் ஊக்கத் திட்டங்களும் பொருளாதார ரீதியாகவும் செயல்பாட்டு ரீதியாகவும் திறம்பட செயல்படுத்தப்பட்டனவா?

**CAG என்ன பரிந்துரைக்கிறார்?**

1. பள்ளிகளை தரம் உயர்த்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை அரசு உறுதிசெய்யலாம். மேலும், கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில், தொலைதூர இடங்கள் பொருத்தமட்டில், நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மறுபரிசீலனை செய்யப்படுவதையும் உறுதிசெய்யலாம்.
2. ஆசிரியர் பணியிடங்களின் தேவையை மாற்றங்களுக்கேற்ப மதிப்பிடுவதன் மூலமும், காலிப் பணியிடங்களை தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலமும் ஆசிரியர் தேர்வு செயல்முறை நெறிப்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்யலாம்.
3. இலவச மடிக்கணினித் திட்டமும், காலணி மற்றும் பள்ளிப் பைகள் வழங்குவதற்கான திட்டங்களும் சரியான நேரத்தில் செயல்படுத்தப்பட்டு முறையாக பொருட்கள் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யலாம்.
4. UDISE மற்றும் EMISன் தரவின் தரத்தை அரசு உறுதிசெய்யலாம், அதன் மூலம் தரவைச் சுத்தப்படுத்த ஒரு சிறப்பு இயக்கம் நடத்தி முறையான கண்காணிப்பை உறுதிசெய்யலாம்.

**CAGன் கண்டுபிடிப்புகள் என்ன?**

மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தின் அடிப்படையில், அகில இந்திய அளவில் மாநிலம் சிறப்பாக செயல்பட்டிருந்தாலும், 2016-21 ஆண்டுகளில், அரசு நடத்தும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை முறையே 14.76 விழுக்காடு மற்றும் 11.84 விழுக்காடு குறைந்திருந்தது. அதே நேரத்தில், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்திருந்தது.

மாநிலத்தில் ஐந்து கிமீ சுற்றளவில் உயர்நிலைப் பள்ளி இல்லாத 2,133 குடியிருப்புகளும், எட்டு கிமீ சுற்றளவில் மேல்நிலைப் பள்ளி இல்லாத 1,926 குடியிருப்புகளும் உள்ளன. 2016-21ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட 528 பள்ளிகளில் 515 பள்ளிகள் தரம் உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இந்த பள்ளிகளில் போதிய உள்கட்டமைப்பு மற்றும் ஆசிரியர் பணியாளர்கள் இல்லை.

தேசிய கல்விக் கொள்கையானது( National Education Policy) கல்விக்கான பொதுச் செலவினத்தை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6 விழுக்காடாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆயினும், நிதி ஒதுக்கீட்டில் போதிய முன்னுரிமை வழங்காததன் விளைவாக, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான மாநிலத்தின் செலவினம் 2016-17ல் GSDP-ல் 0.94 விழுக்காட்டிலிருந்து 2020-21ல் 0.85 விழுக்காடாக குறைந்துள்ளது .

ஆட்சேர்ப்பு தாமதம் காரணமாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அதற்கு எதிரான காலிப் பணியிடங்களில் உள்ள பற்றாக்குறையால் அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாநில அளவில் 11,711 வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருப்பதால், வகுப்புகள் திறந்தவெளியிலும், மரங்களின் நிழலிலும், ஆய்வகக் கட்டிடங்களிலும், பாழடைந்த கட்டமைப்புகளிலும் அல்லது தற்காலிக வகுப்பறைகளிலும் நடத்தப்படுகின்றன. புதிய வகுப்பறைகள் கட்டப்படும் தற்போதைய வேகத்தில், அடுத்த 10 ஆண்டுகளில் கூட இந்த இடைவெளி குறையாது.

முறையான கட்டிட உரிமங்கள், சுகாதார சான்றிதழ்கள் மற்றும் தீ பாதுகாப்பு சான்றிதழ்கள் இல்லாமல் இயங்கும் பள்ளிகள், மாணவர்களின் பாதுகாப்புக்கு தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன.

மாணவர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கத்திற்காக, ஆண்டிற்கு ₹ 2,400 கோடி செலவில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள், அனைத்து நிலைகளிலும் திறமையற்ற செயல்பாட்டினால் பாதிக்கப்பட்டது.

கண்காணிப்பிற்காக DSE மற்றும் GoI ஆல் பயன்படுத்தப்படும் UDISE தரவானது, துல்லியத்தில் குறைவுள்ளதாகவும் முழுமையற்றதாகவும் காணப்பட்டது.

| அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்த செயலாக்க தணிக்கை | |
|---|---|
| முக்கிய நிலவரங்கள்- செயல்திறன் முடிவுகள் மற்றும் பள்ளி வசதி தொடர்பானவை | |
| மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க, கல்வி வாய்ப்பை அதிகரிப்பது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஐந்து கி.மீ.க்குள் உயர்நிலைப் பள்ளியும், எட்டு கி.மீ.க்குள் மேல்நிலைப் பள்ளியும் அமைப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. கொள்கயின்படி, மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிகளில், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு வழங்கப்படவேண்டும் அல்லது குடியிருப்புப் பள்ளிகள் **(residential schools)** பொருத்தமான இடங்களில் வழங்கப்படவேண்டும். | |
| அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள்) | • உயர்நிலைப் பள்ளிகள் : **3,685**<br>• மேல்நிலைப் பள்ளிகள் : **4,339** |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான செலவினம் (2016-21) | • மாநில நிதி : **₹ 64,140 கோடி**<br>• ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் : **₹ 10,823 கோடி** |
| மாநிலத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை (2020-21) | • உயர்நிலைக் கல்வியில் : **20.31 இலட்சம்**<br>• மேல்நிலைக் கல்வியில் : **17.21 இலட்சம்** |
| மாணவர் தக்கவைப்பு விகிதம் (2019-20) (student retention rate) | • அரசு பள்ளிகள் : **93 விழுக்காடு**<br>• அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் : **96 விழுக்காடு** |
| கல்வி வசதி இல்லாத குடியிருப்புகள் (மார்ச் 2021) | • **5** கிமீக்குள் உயர்நிலைப் பள்ளி இல்லாத குடியிருப்புகள் : **2,133**<br>• **8** கிமீக்குள் மேல்நிலைப் பள்ளி இல்லாத குடியிருப்புகள் : **1,926** |

| தணிக்கைக் கண்டுபிடிப்புகள் - செயல்திறன் முடிவுகள் மற்றும் பள்ளி வசதி தொடர்பானவை | |
|---|---|
| விவரம் | கண்டுபிடிப்புகள் |
| சேர்க்கை அடிப்படையில் செயல்திறன் *(பத்தி 2.1; பக்கம் 7)* | • 2020-21ல் உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்விகளில் மொத்த சேர்க்கை விகிதம் முறையே 94.20 விழுக்காடு மற்றும் 78.60 விழுக்காடு ஆகும்.<br>• தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்து வரும் நிலையில், 2016 முதல் 2021 வரை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை முறையே 14.76 விழுக்காடு மற்றும் 11.84 விழுக்காடு குறைந்துள்ளது. |

| விவரம் | கண்டுபிடிப்புகள் |
|---|---|
| பள்ளி வசதி ஏற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் *(பத்தி 3.1; பக்கம் 15)* | • 31 மார்ச் 2021 நிலவரப்படி, 2,133 குடியிருப்புகளில் ஐந்து கிமீக்குள் உயர்நிலைப் பள்ளியும், 1,926 குடியிருப்புகளில் எட்டு கிமீக்குள் மேல்நிலைப் பள்ளியும் இல்லை.<br>• பள்ளி வயது மக்களைக் கண்டறிய, பள்ளிவசதி அளிக்கப்படாத குடியிருப்புகளில் **(unserved habitations)** கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.<br>• பள்ளிவசதி அளிக்கப்படாத குடியிருப்புகளில் சுமார் ஏழு விழுக்காடு குழந்தைகளுக்கு மட்டுமே போக்குவரத்து ஏற்பாட்டின் பலன் கிடைத்தது. |
| பள்ளிகளை தரம் உயர்த்துவதில் உள்ள குறைவுகள் *(பத்தி 3.2; பக்கம் 18)* | • 2016-21வரையிலான காலக்கட்டத்தில், உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 281 இடைநிலைப் பள்ளிகளில் 275 மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட 247 உயர்நிலைப் பள்ளிகளில் 240 பள்ளிகள், தரம் உயர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை. |

| முக்கிய விவரங்கள்- பள்ளிக் கல்வியின் தரம் | |
|---|---|
| கல்வியின் தரத்தை உறுதி செய்வதில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள் போன்ற போதிய உள்கட்டமைப்பு வசதிகள் வழங்குதல் மற்றும் போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களை ஈடுபடுத்துதல் ஆகியவை அடங்கும். | |
| பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் (மார்ச் 2022) | • அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் : **1,18,914**<br>• உண்மையில் பணியமர்த்தப்பட்ட எண்ணிக்கை : **1,00,052**<br>• காலியிடங்கள் : **18,862** |
| 2016-21 வரையிலான காலக்கட்டதில் நிறுவப்பட்ட புதிய பள்ளிகள் (தற்போதுள்ள பள்ளிகளை மேம்படுத்துவதன் மூலம்) | • நிறுவப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் : **281**<br>• நிறுவப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் : **247** |
| அரசுப் பள்ளிகளில் வகுப்பறை வசதி மற்றும் பற்றாக்குறை | • நிரந்திர கட்டட வகுப்பறைகள் : **66,169**<br>• பகுதியளவு நிரந்திர கட்டடம்/கூரை வகுப்பறைகள் உள்ளவை : **20,732**<br>• பற்றாக்குறை (மதிப்பீடு) : **11,711** |
| 2016-21 வரையிலான காலக்கட்டதில் கட்டப்பட்ட வகுப்பறைகள் | • மாநில நிதி மூலம் (நபார்டு கடன்) : **5,176**<br>• ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்ட நிதி மூலம் : **410** |
| அரசுப் பள்ளிகளில் பிற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் (மார்ச் 2022) | • ஆண்கள் கழிப்பறை இல்லாத பள்ளிகள் : **135**<br>• பெண்கள் கழிப்பறை இல்லாத பள்ளிகள் : **20**<br>• சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கான கழிப்பறை இல்லாத பள்ளிகள் : **1,966**<br>• விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகள் : **898** |

| தணிக்கைக் கண்டுபிடிப்புகள் - பள்ளிக் கல்வியின் தரம் | |
|---|---|
| **விவரம்** | **கண்டுபிடிப்புகள்** |
| பள்ளிக் கல்விக்கு போதிய நிதி இல்லாமை<br>*(பத்தி 4.1; பக்கம் 23)* | • உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான நிதியானது **2016-17**ல் **GSDP**ன் **0.94** விழுக்காட்டிலிருந்து **2020-21**ல் **GSDP**ன் **0.85** விழுக்காடாக குறைந்துள்ளது.<br>• போதிய நிதியின்மை, உள்கட்டமைப்பு வசதிகளில் இடைவெளிகளை ஏற்படுத்தியது. |
| பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை<br>*(பத்தி 4.2; பக்கம் 23)* | • அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, விதிமுறை அடிப்படையிலான தேவையை விட **31,490** ஆக குறைந்திருந்தது.<br>• அனுமதிக்கப்பட்ட பணியிடம் எண்ணிக்கையான **1,18,914** க்கு எதிராக , மார்ச் **2022** நிலவரப்படி பணியமர்த்தப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை **1,00,052** மட்டுமே ஆகும்.<br>• ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு தாமதமானது. இது காலியிடங்கள் அதிகரிப்பதில் பங்களித்தது. |
| பள்ளிகளில் உள்கட்டமைப்பு பற்றாக்குறை<br>*(பத்தி 4.3.2; பக்கம் 32)* | • **108** மாதிரி பள்ளிகளில் **48**ல் (**44** விழுக்காடு) மொத்தம் **227** வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருந்தது. மாதிரிப் பள்ளிகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், மாநில அளவில் வகுப்பறைகளின் பற்றாக்குறையானது தோராயமாக **11,711** ஆக இருக்கும் என்று தணிக்கை மதிப்பிட்டுள்ளது.<br>• **2016-21**வரையிலான காலக்கட்டதில் தரம் உயர்த்தப்பட்ட **528** உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **364** பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகள் அனுமதிக்கப்படவில்லை. |

| முக்கிய விவரங்கள்-கல்வி வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு | |
|---|---|
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் அவர்களின் தக்கவைப்பை ஊக்குவிக்க அரசு பல ஊக்கத் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்துகிறது. | |
| செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் | • செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்களில் (1) குடும்பத்தில் பொருளீட்டிநருக்கான (bread winning) திட்டம், (2) மாணவர்களுக்கான காமராஜர் விருது திட்டம் (3) கிராமப்புற மாணவர்களின் திறமைத் தேடலுக்கான தேர்வுத் திட்டம், (4) மடிக்கணினி வழங்கல் (5) பள்ளி பைகள் வழங்கல், (6) பாதணிகள் வழங்கல் |

| தணிக்கைக் கண்டுபிடிப்புகள் - கல்வி வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு | |
|---|---|
| விவரம் | கண்டுபிடிப்புகள் |
| நலத்திட்டங்கள் மற்றும் ஊக்கத் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்<br>*(பத்திகள் 5.1 மற்றும் 5.2; பக்கங்கள் 47 மற்றும் 52)* | • இலவச மடிக்கணினி, கால் அணிகள் மற்றும் பள்ளிப்பை வழங்கல் திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் இலவசப் பொருட்கள் தாமதமாக வழங்கப்படுதல் ஆகியவற்றின் விளைவாக இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு பலன்கள் அளிப்பதில் பாதிப்பு, வீண் செலவு, மற்றும் அரசு நிதியின் தேவையற்ற முடக்கம் ஆகியவை ஏற்பட்டது.<br>• காமராஜர் விருதுத் திட்டம் போன்ற ஊக்கத் திட்டங்களின் அமலாக்கம் நிதி பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டது. |
| கண்காணிப்பில் உள்ள குறைபாடுகள்<br>*(பத்திகள் 6.1, 6.2, 6.4 மற்றும் 6.5; பக்கங்கள் 59, 61 மற்றும் 63)* | • கண்காணிப்பில் உள்ள குறைபாடுகள், அதிக எண்ணிக்கையிலான தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை தாமதமாக புதுப்பித்தல்/புதுப்பிக்காமல் இருப்பதற்கு பங்களித்தது. முறையான கட்டிட உரிமங்கள், சுகாதார சான்றிதழ்கள் மற்றும் தீ பாதுகாப்பு சான்றிதழ்கள் இல்லாமல் இயங்கும் பள்ளிகள், மாணவர்களின் பாதுகாப்புக்கு தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன.<br>• EMIS தரவுத்தளத்தின் மூலம் இலவசப் பொருட்களின் கொள்முதல் மற்றும் வழங்கல்களை கண்காணிப்பதில் உள்ள குறைபாடுகள், மாணவர்களுக்கு பலன்களை அளிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியது. கண்காணிப்பு நோக்கத்திற்காக, CSE மற்றும் அரசால் பயன்படுத்தப்படும் UDISE தரவு அதன் துல்லியத்தன்மையில் குறைவுபட்டு முழுமையற்றதாகவும் இருந்தது. |

# அத்தியாயம் I

# முன்னுரை

## அத்தியாயம் I

## முன்னுரை

### 1.1 தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

உயர்நிலை[1] மற்றும் மேல்நிலைக்[2] கல்வியானது, மாணவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய இரண்டிற்கும், உறுதியான அடித்தளத்தை உருவாக்குகின்றது. கற்றலுக்கு சாதகமான சூழலை அமைத்தளிப்பதற்கு, பள்ளிகளில் போதிய உள்கட்டமைப்பும் மனித வளங்களும் வழங்குதல் மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துதல், ஆகிய செயல்பாடுகளின் மூலம், பள்ளிகளில் தரமான கல்வியை உறுதி செய்யும் பொறுப்பை பள்ளிக் கல்வி ஆணையர் (Commissioner of School Education - CSE) பெற்றுள்ளார்.

CSEன் முக்கிய செயல்பாடுகள்:

- பாலினம் மற்றும் சமூக-பொருளாதாரத் தடைகளைப் பொருட்படுத்தாமல், அனைவருக்கும் தரமான உயர்நிலை/மேல்நிலைக் கல்வியை உறுதிசெய்தல்.
- அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மகிழ்ச்சியுடன் கூடிய பயனுள்ள கற்றலுக்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குதல்.
- பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு இலவச போக்குவரத்து மற்றும் தேவை அடிப்படையிலான குடியிருப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு உதவி வழங்குதல்.
- மாணவர்களை அறிவியல் குறித்த செயல்பாடுகள் (science projects), சுற்றுச்சூழல் மன்றங்கள் (eco-clubs) மற்றும் செயல்முறை அடிப்படையிலான கற்றல் (project based learning) ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபடுத்துவதன் மூலம் மாணவர்களிடையே ஆர்வத்தையும் அறிவியல் மனப்பான்மையையும் மேம்படுத்துதல்.
- தொடர்ச்சியான பணியிடைப் பயிற்சி (in-service training) மூலம் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துதல்.

### 1.2 ஒருங்கிணைந்த பள்ளி கல்வி *(Samagra Shiksha)*

அனைவருக்கும் கல்வித் திட்டம்[3] (Sarva Shiksha Abhiyan - SSA) மற்றும் அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம்[4] (Rashtriya Madhyamik Shiksha Abhiyan RMSA) ஆகியவை, இந்தியாவின் இரண்டு முக்கிய பள்ளிக் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களாகும். குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக்

---

இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட சுருக்கங்கள் பக்கம் 98ல் உள்ள சுருக்க சொற்றொடரின் திரட்டில் பட்டியலிடப்பட்டுள்ளன

1 9 மற்றும் 10ஆம் வகுப்புகள்.

2 11 மற்றும் 12ஆம் வகுப்புகள்.

3 அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்கான திட்டம்.

4 அனைவருக்கும் உயர்நிலை கல்வியை உறுதி செய்வதற்கான திட்டம்.

கல்விக்கான உரிமைச் சட்டம் (Right of Children to Free and Compulsory Education RTE) 2009ஐ செயல்படுத்துவதற்கு, SSA, தொடக்கக் கல்வி மீது (1 முதல் 8ஆம் வகுப்புகள் வரை) கவனம் செலுத்தியபோது, RMSA, 9 மற்றும் 10ஆம் வகுப்புகளை உள்ளடக்கியது. இந்திய அரசானது, இந்த இரண்டு திட்டங்களையும், ஆசிரியர் கல்வி திட்டத்துடன் இணைத்து (மார்ச் 2018) ஒரே திட்டமாக, அதாவது, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி[5](Samagra Shiksha - SS) என ஏப்ரல் 2018லிருந்து, பாலர் பள்ளி முதல் 12ஆம் வகுப்பு வரை, விரிவுப்படுத்தியது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

- தரமான கல்வியை வழங்குதல் மற்றும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்,
- பள்ளிக் கல்வியில் சமூக மற்றும் பாலின இடைவெளிகளைக் குறைத்தல்,
- பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் சமத்துவம் மற்றும் மாணவர் சேர்க்கையை (equity and inclusion) உறுதி செய்தல்,
- பள்ளிக் கல்வி வழிமுறைகளில் குறைந்தபட்ச தரத்தை உறுதி செய்தல்,
- தொழிற்கல்வியை (vocationalisation of education) ஊக்குவித்தல்,
- RTE சட்டம், 2009ஐ மாநிலத்தில் நடைமுறைப்படுத்த ஆதரவளித்தல் மற்றும்
- தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (State Council for Education Research and Training Tamil Nadu SCERT-TN), மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIETs) ஆகியவற்றை வலுப்படுத்துதல் மற்றும் தரம் உயர்த்துதல்.

இத்திட்டமானது, SSன் மாநில திட்ட இயக்குநர் (State Project Director - SPD)ஆல் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், SPD, வருடாந்திர செயல்பாட்டுத் திட்டம் மற்றும் வரவு செலவு திட்டத்தை (Annual Work Plan and Budget- AWPB) இந்திய அரசின் (GoI) கல்வி அமைச்சகத்திற்கும் (MoE), சமர்ப்பிக்கிறார். MoEன் திட்ட ஒப்புதல் வாரியம் (Project Approval Board- PAB) AWPB பற்றி விவாதித்து ஒப்புதல் அளிக்கிறது. ஒப்புதலின் அடிப்படையில், நிதி அளிக்கப்பட்டு, GoI மற்றும் தமிழ்நாடு அரசு (GoTN) ஆகிய இரண்டும் SSக்கான செலவினங்களை 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

## 1.3 உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான நிதி

உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்காகவும் அதைச் சார்ந்த திட்டங்களுக்காகவும் வரவு செலவுத் திட்டம் மூலம் GoTN நிதி வழங்குகிறது. SS மற்றும் SCERT-TNன் கீழ் வரவு செலவுத் திட்டம் மூலம் வழங்கப்படும் நிதியானது, மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது, இது மாநிலத்தில் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

[5] முழுமையான கல்வியை அடைவதற்கான திட்டம்.

2016-2021 வரையிலான காலக் கட்டத்தில் பள்ளிக் கல்விக்கான பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள் பின்வரும் **அட்டவணை 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1: 2016-21 ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரங்கள்**

(₹ கோடியில்)

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|
| | CSE | SS/SCERT-TN | மொத்தம் | CSE | SS/SCERT-TN | மொத்தம் |
| 2016-17 | 10,926.06 | 2,429.60 | 13,355.66 | 10,750.54 | 1,490.12 | 12,240.66 |
| 2017-18 | 11,739.20 | 2,720.30 | 14,459.50 | 11,552.88 | 1,537.48 | 13,090.35 |
| 2018-19 | 12,375.94 | 1,940.82 | 14,316.76 | 13,299.97 | 1,916.01 | 15,215.97 |
| 2019-20 | 14,410.91 | 3,060.63 | 17,471.54 | 14,555.91 | 3,007.56 | 17,563.47 |
| 2020-21 | 15,997.12 | 3,324.52 | 19,321.64 | 13,980.66 | 2,871.68 | 16,852.34 |
| **மொத்தம்** | **65,449.24** | **13,475.87** | **78,925.10** | **64,139.96** | **10,822.84** | **74,962.79** |

(ஆதாரம்: GoTNன் நிதி கணக்கு)

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் செயல்படாத காரணத்தால் 2020-21 தவிர, கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளிக் கல்விக்கான செலவினம் தொடர்ந்து அதிகரித்துள்ளது.

## 1.4 நிறுவன அமைப்பு

பள்ளிக் கல்வித் துறையின் செயலர், மாநிலத்தின் பள்ளிக் கல்வியின் பொறுப்பாளராக உள்ளார். செயலாளர், CSE, SS, SCERT-TN, அரசுத் தேர்வுகள் இயக்குநரகம் (DGE) மற்றும் தமிழ்நாடு பாடப் புத்தகம் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் (TNTBESC) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறார்.

வருவாய் மாவட்ட அளவில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் ஆகிய பள்ளிகளின் நிர்வாகத்திற்கு, முதன்மைக் கல்வி அலுவலர்கள் (CEOs) தலைமை வகிக்கின்றனர். தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (District Educational Officers (DEOs)) மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் (Block Educational Officers (BEOs) உதவுகிறார்கள். வருவாய் மாவட்டங்களுக்குள், அந்தந்த கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும், DEOக்கள் பொறுப்பு வகிக்கின்றனர். 3,685 அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளும், 4,339 அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளும் CSEன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

## 1.5 தணிக்கையின் பரப்பு மற்றும் நோக்கங்கள்

பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்காக, 2016-17 முதல் 2020-21 வரையிலான ஐந்து ஆண்டு காலகட்டத்தினை தணிக்கை உள்ளடக்கியது:

- மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெறுவதற்கான போதுமான பள்ளி வசதிகள் உள்ளனவா?

- CSEன் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு உயர்நிலை மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் மனிதவளம் வழங்கப்பட்டுள்ளதா; மற்றும்
- கல்வி சம்பந்தப்பட்ட மற்றும் பிற பொருட்கள் இலவசமாக வழங்குவதற்கான திட்டங்கள் மற்றும் ஊக்கத் திட்டங்கள் பொருளாதார ரீதியாகவும், திறம்படவும் செயல்படுத்தப்பட்டனவா.

## 1.6 தணிக்கை அளவுகோல்கள்

தணிக்கை கண்டிபிடிப்புகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்கள் பின்வருமாறு:

- வருடாந்திர செயல்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டம் (SS),
- GoTN/GoI திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்,
- SSன் கட்டமைப்பு வழிகாட்டுநெறிமுறைகள்,
- RTE, 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2011,
- தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1973,
- தமிழ்நாடு பொதுக் கட்டிட உரிமச் சட்டம், 1965 மற்றும்
- அவ்வப்போது GoI மற்றும் GoTNஆல் வழங்கப்படும் உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகள்.

## 1.7 தணிக்கையின் பரப்பு

2016-17 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் "அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள்" குறித்த செயலாக்கத் தணிக்கையானது, CSE, SPD, SCERT-TN, DGE மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மாதிரி CEOக்கள், DEOக்கள், SSன் கூடுதல் CEOக்கள், DIETகள், பள்ளிகள் மற்றும் பெண்கள் விடுதியின் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## 1.8 மாதிரிக்கான முறை

தணிக்கைக்கான மாவட்டங்களை மாதிரி தெரிவுசெய்வதற்கு ஒரு அடுக்கு மாதிரி முறை (stratified sampling methodology) பின்பற்றப்பட்டது. மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்கள், மாவட்டத்திலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் மாவட்டத்திலுள்ள மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று அடுக்குகளின் (Strata) கீழ் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு அடுக்கிலிருந்தும், மூன்று வருவாய் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒன்பது வருவாய் மாவட்டங்களில் இருந்து ஒரு கல்வி மாவட்டம், எளிய தொடர்பற்ற மாதிரி முறையைப் (simple random sampling method) பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்டது. ஒரு மாதிரி கல்வி மாவட்டத்திற்கு, இரண்டு வட்டங்கள்

வீதம், தொடர்பற்ற முறை பின்பற்றி, பதினெட்டு வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 138 பள்ளிகள்[6] (தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 33 விழுக்காடு) தொடர்பற்ற முறையில் மாதிரி தெரிவுசெய்யப்பட்டன. வருவாய் மாவட்டங்கள், கல்வி மாவட்டங்கள், வட்டங்கள் மற்றும் பள்ளிகளின் பட்டியல் **இணைப்பு 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

## 1.9 தணிக்கை முறைமை

தணிக்கை நோக்கங்கள், அளவுகோல்கள் மற்றும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பரப்பு குறித்து விவாதிக்க 30, நவம்பர் 2021 அன்று பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளருடன் ஒரு நுழைவுக் கூட்டம் நடத்தப்பட்டது. களப்பணியானது, தொடர்புடைய கோப்புகளை ஆய்வு செய்தல், புகைப்பட ஆதாரங்களை சேகரித்தல், மாதிரி தேர்வின் அடிப்படையில் துறையில் விரிவான ஆய்வு போன்றவற்றை உள்ளடக்கியது. தணிக்கை கண்டுபிடிப்புகளை பற்றி விவாதிக்க, 11, மே 2022 அன்று அரசு முதன்மை செயலாளர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையருடன் நிறைவுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த நிறைவுக் கூட்டத்தில் தரப்பட்ட துறையின் பதிலானது, இவ்வறிக்கையை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டது.

## 1.10 ஏற்பு

இந்த செயலாக்கத் தணிக்கையை மேற்கொள்வதில், துறை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை தணிக்கை பெரிதும் பாராட்டுகிறது.

[6] 108 அரசுப் பள்ளிகளும் மற்றும் 30 அரசு உதவிப் பெறும் பள்ளிகளும் அடங்கும்.

# அத்தியாயம் II

# செயல்திறன் முடிவுகள்

# அத்தியாயம் II

## செயல்திறன் முடிவுகள்

### செயல்திறன் அளவுருக்கள்

இந்த அத்தியாயம், மாணவர் சேர்க்கை, தக்கவைப்பு விகிதம் (retention rate), தேர்ச்சி விழுக்காடு போன்றவற்றின் அடிப்படையில், அரசு உயர்நிலைப் பள்ளிகள் (Government High Schools - GHSs) மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளின் (Government Higher Secondary Schools - GHSSs) செயல்திறன்களை ஆய்வு செய்ய முயல்கிறது.

### 2.1 சேர்க்கை

அகில இந்திய அளவில், உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்வியின் மொத்த சேர்க்கை விகிதமான (Gross Enrolement Rate -GER) 79.89 விழுக்காடு மற்றும் 53.80 விழுக்காட்டிற்கு எதிராக, தமிழ்நாடு முறையே, 94.20 விழுக்காடு மற்றும் 78.60 விழுக்காடு (2020-21) மொத்த சேர்க்கை விகித அளவினை எட்டியுள்ளது. 2016-21 வரையிலான காலக்கட்டத்தில், உள்ளாட்சி பள்ளிகள் மற்றும் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகள் உட்பட GoTNஆல் நடத்தப்படும் பள்ளிகளில், மாணவர் சேர்க்கைகள், **விளக்கப்படங்கள் 2.1** மற்றும் **2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 2.1: உயர்நிலை கல்வியில் மாணவர்களின் சேர்க்கை



விளக்கப்படம் 2.2: மேல்நிலை கல்வியில் மாணவர்களின் சேர்க்கை




(ஆதாரம்: கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பிலிருந்து (UDISE) பெறப்பட்ட தரவு)

2016-21 வரையிலான ஆண்டுகளில், அரசு உதவி பெறும் மற்றும் உதவிபெறாத தனியார் பள்ளிகளில், மேல்நிலை கல்வி மாணவர் சேர்க்கையானது, 3.97 விழுக்காடு அதிகரித்திருக்கையில், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளில், 11.84 விழுக்காடு குறைந்திருந்தது. இதேபோல், அரசு உதவிபெறும் மற்றும் உதவிபெறாத தனியார் பள்ளிகளில், உயர்நிலை மாணவர் சேர்க்கையானது, 0.60 விழுக்காடு அதிகரித்திருக்கையில், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளில், இது 14.76 விழுக்காடு குறைந்திருந்தது.

இவ்வாறாக, அகில இந்திய அளவில், GERன் அடிப்படையில், மாநிலத்தின் உயர் செயல்திறனை (higher performance) அரசு மற்றும் உள்ளாட்சி பள்ளிகளைக் காட்டிலும், தனியார் பள்ளிகளே செறிவூட்டியுள்ளதாகத் தணிக்கை கண்டறிந்தது. **அத்தியாயம் IV**ல் விவரிக்கப்பட்டபடி, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் தேவையான உள்கட்டமைப்புகளை உறுதி செய்வதில் உள்ள குறைபாடுகளே, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பாதிக்கப்பட்டதற்கு காரணமாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

2021-22ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், தேர்ச்சி சதவீதத்தை மேம்படுத்த துறையானது முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் அரசு தெரிவித்தது (மே 2022). 2020-21ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், 2016-21 வரையிலான ஆண்டுகளில் மாணவர் சேர்க்கையில் மிகப் பெரிய சரிவு இருந்ததை தணிக்கை கண்டறிந்தது.

### 2.1.1 பள்ளி செல்லாத குழந்தைகளை அடையாளம் காண்பதில் உள்ள குறைபாடுகள்

GoTN மற்றும் SS, மாணவர்கள் பள்ளிக் கல்வியினை நிறைவு செய்வதை (completion of schooling cycle) உறுதி செய்வதற்காக, மாணவர்களைப் பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதற்கான, சிறப்பு முயற்சிகளின் அவசியத்தை நினைவு கூர்கிறது. கற்றல் சுமையை சமாளிக்க முடியாத மாண்வர்கள் பள்ளியை விட்டு வெளியேறும் வாய்ப்பு உள்ளது. அவர்களைத் திரும்பச் சேர்க்கும் முயற்சியில், ஒரு மாணவன் தொடர்ந்து 21 நாட்களுக்குப் பள்ளிக்கு வரவில்லை

என்றால், அந்தக் மாணவனை இடைநிற்க வாய்ப்புள்ள (potential dropout) மாணவனாகக் கருதி, அக்குழந்தையை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வரும் பொருட்டு, தலைமை ஆசிரியர் (HM) பெற்றோர்களை சந்தித்து, அவர்களிடம் பேசி, அவர்களைச் சம்மதிக்கச் செய்ய வேண்டும் என்று GoTN உத்தரவிட்டுள்ளது (ஜனவரி 2017). இதற்குப் பிறகும், தொடர்ந்து 30 பள்ளி நாட்கள் மாணவன் வரவில்லை என்றால், அந்த மாணவனின் பெயர் வருகைப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். அத்தகைய மாணவர்கள் "பள்ளி இடைநிறுத்தப்பட்டவர்கள்" (drop out) அல்லது "பள்ளி செல்லாக் குழந்தைகள்" ("Out of School Children"-OoSC) என்று கருதப்படுகிறார்கள்.

மார்ச் 2018ல், 2018-19ஆம் ஆண்டிலிருந்து, 15-18 வயதுக்குட்பட்ட OoSCஐ அடையாளம் காண மாவட்டங்களின் கூடுதல் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு SPD உத்தரவிட்டது. SPDன் அறிவுறுத்தலின்படி, குழந்தைகளின் பள்ளி இடைநிறுத்தத்திற்கான காரணங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு, கூடுதல் CEOக்கள், வீடு வீடாக ஆய்வு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். வட்டார அளவிலான மேற்பார்வையாளர்கள் மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும், பள்ளி மேலாண்மை குழு (School Management Committee-SMC) மற்றும் பள்ளிகளின் HM கணக்கெடுப்பில் ஈடுப்பட்டிருக்க வேண்டும்.

வீடு வீடாக கணக்கெடுக்கும் திட்டமானது, ஏப்ரல் 2018 முதலே தொடங்கப்பட இருந்தபோதிலும், 15-18 வயதுக்குட்பட்ட OoSC கணக்கெடுப்பு, 2021-22ல் மட்டுமே தொடங்கப்பட்டது என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. 2018-19 முதல் 2020-21 வரையிலான AWPBல், 15-18 வயதுக்குட்பட்ட OoSCஐ கணக்கெடுக்கத் தேவையான நிதி ஒதுக்கீடுக்கான எந்த முன்மொழிவும் இல்லை என்பதும் கண்டறியப்பட்டது. மூன்று ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகு, 2021-22ற்கான AWPBல், கணக்கெடுப்புக்கான வரவு செலவு சேர்க்கப்பட்டது மற்றும் OoSCகளை மீண்டும் பள்ளிக்கு கொண்டு வர ₹1.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மார்ச் 2022ல் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

- கணக்கெடுப்பிலுள்ள 5.34 இலட்சம் OoSCக்களில், 1.89 இலட்சம் மாணவர்கள் மட்டுமே மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.
- மாவட்டங்களில், OoSCன் மறு சேர்க்கையானது, 23 முதல் 62 விழுக்காடு வரை இருந்தது. தருமபுரி மாவட்டம், 62 விழுக்காடு OoSCஐ மறு சேர்க்கை செய்து முதலிடத்தில் இருந்தது. குறைந்த செயல்திறன் கொண்ட மாவட்டம் திருநெல்வேலி ஆகும், அங்கு OoSCன் மறு சேர்க்கை 23 விழுக்காடாக இருந்தது.
- மற்ற பிரிவுகளில் சேர்க்கை, இறப்பு, உடல்நலப் பிரச்சினைகள், இடம்பெயர்வு போன்ற காரணங்களினால், 3.04 இலட்சம் மாணவர்கள் இலக்கு இல்லாத குழுவாக அடையாளம் காணப்பட்டனர்.
- 10,482 மாணவர்கள் தகுதிக்கு மேற்பட்ட வயதுடையவர்களாக (overage) அடையாளம் காணப்பட்டனர்.

15-18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கணக்கெடுப்பை நடத்த SPD அறிவுறுத்தியிருந்த போதிலும், 2018-19 முதல் 2020-21 வரையிலான ஆண்டுகளில், அதற்கான நிதி எதுவும் வழங்கப்படவில்லை என்பதை தணிக்கை

கண்டறிந்தது. இதன் விளைவாக, OoSCகளை மீண்டும் பள்ளியில் சேர்க்கும் நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை.

தற்போது OoSCன் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதாக அரசு பதிலளித்தது (மே 2022). மற்றும் OoSCகளின் எண்ணிக்கையை மேலும் குறைக்க, பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடம்பெயரும் மாணவர்களைக் கண்டறியும் பொருட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக SPD உறுதியளித்தார்.

## 2.2 தக்கவைப்பு விகிதம்

பள்ளிக் கல்வி தொடர்பான GoTNன் கொள்கையானது, 10ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களையும் முழுமையாகத் தக்கவைத்துக் கொள்வதை (100 விழுக்காடு) நோக்கமாக கொண்டுள்ளது. உயர்நிலைக் கல்வி மாணவர் தக்கவைப்பு விகிதமானது, ஒரு ஆண்டின் 10ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கையை, முந்தைய ஆண்டின் 9ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கையின் சதவீதமாக கணக்கிடப்படுகிறது. **அட்டவணை 2.1**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி மாநிலம் அதிக தக்கவைப்பு விகிதத்தை அடைந்துள்ளது.

**அட்டவணை 2.1: உயர்நிலைக்கல்வியில் ஆண்டு வாரியான தக்கவைப்பு விகிதம்**

**(விழுக்காட்டில்)**

| ஆண்டு | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 |
|---|---|---|---|---|---|
| அரசு பள்ளிகளில் தக்கவைப்பு விகிதம் | *94* | *84* | *93* | *93* | *99* |
| தனியார் மற்றும் பிற பள்ளிகளில் தக்கவைப்பு விகிதம் | *97* | *90* | *96* | *96* | *99* |
| மொத்த தக்கவைப்பு விகிதம் | *96* | *87* | *95* | *95* | *99* |

(ஆதாரம் : UDISEலிருந்து பெறப்பட்ட தரவு)

கோவிட்-19 பெருந்தொற்றினால் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு காலகட்டத்தில், அனைத்து 9ஆம் வகுப்பு மாணவர்களையும், 10ஆம் வகுப்பிற்கு தேர்ச்சி பெற GoTN அனுமதித்த ஆண்டான 2020-21ஐத் தவிர, மற்ற ஆண்டுகளில், அரசுப் பள்ளிகளின் தக்கவைப்பு விகிதம் தனியார் பள்ளிகளின் தக்கவைப்பு விகிதத்தை விட கணிசமாகக் குறைவாக இருப்பது **அட்டவணை 2.1ல்** இருந்து தெளிவாகின்றது.

## 2.3 தேர்ச்சி விழுக்காடு

2017 முதல் 2021 வரையிலான உயர்நிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் (Secondary School Leaving Certificate - SSLC) மற்றும் மேல்நிலைத் தேர்வு (Higher Secondary Examination - HSE) முடிவுகளின் பகுப்பாய்வு **அட்டவணை 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2: SSLC மற்றும் HSE தேர்வுகளில் தேர்ச்சி விழுக்காடு

(விழுக்காட்டில்)

| ஆண்டு | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 |
|---|---|---|---|---|---|
| **SSLC** | | | | | |
| அரசு பள்ளிகளில் தேர்ச்சி விழுக்காடு | *92* | *91* | *92* | *100* | *100* |
| தனியார் மற்றும் பிற பள்ளிகளில் தேர்ச்சி விழுக்காடு | *97* | *97* | *97* | *100* | *100* |
| மொத்த தேர்ச்சி விழுக்காடு | *95* | *94* | *95* | *100* | *100* |
| **HSE** | | | | | |
| அரசு பள்ளிகளில் தேர்ச்சி விழுக்காடு | *87* | *85* | *85* | *86* | *100* |
| தனியார் மற்றும் பிற பள்ளிகளில் தேர்ச்சி விழுக்காடு | *96* | *96* | *96* | *97* | *100* |
| மொத்த தேர்ச்சி விழுக்காடு | *92* | *91* | *91* | *92* | *100* |

(ஆதாரம்: UDISEலிருந்து பெறப்பட்ட தரவு)

அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இடையேயான தேர்ச்சி விழுக்காட்டில் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடு மட்டுமின்றி **(அட்டவணை 2.2), விளக்கப்படங்கள் 2.3** மற்றும் **2.4**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, மாதிரி தனியார் உதவி பெறும் பள்ளிகளில் SSLC மற்றும் HSE தேர்வுகளில் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் விழுக்காடு, அரசு மற்றும் உள்ளாட்சி பள்ளிகளில் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் விழுக்காட்டை விட கணிசமாக அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

விளக்கப்படம் 2.3: SSLCல் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் விழுக்காடு




(ஆதாரம்: DGE மற்றும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தரவு)




(ஆதாரம்: DGE மற்றும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தரவு)

இவ்வாறு, தேர்ச்சி மற்றும் மாணவர்களின் மதிப்பெண்களின் விழுக்காடு அடிப்படையில், அரசால் நடத்தப்படும் பள்ளிகள், தனியார் மற்றும் பிற பள்ளிகளை விட பின்தங்கயே இருந்தன.

### 2.3.1 தேர்ச்சி விழுக்காட்டினை அதிகரிப்பதற்கான திட்டத்தை பயனற்ற முறையில் செயல்படுத்துதல்

ஜனவரி 2016ல், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பினதங்கிய நிலையிலுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தேர்வு முடிவுகளை மேம்படுத்தும் நோக்கில், GoTN தமிழ்நாடு எக்செல்ஸ் (TANEX) திட்டத்தை அறிமுகப்படுத்தியது. TANEXன் கீழ், ஐந்து மாவட்டங்களில்[1] 1,409 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

தகுதியான மாணவர்களைத் தெரிந்தெடுத்தல், பாட வல்லுநர்கள் மூலம் தரமான பாடத்தொகுதி தயாரித்தல், மாணவர்களுக்கு கல்விக்கான பொருட்களை இலவசமாக வழங்குதல், வார இறுதி வகுப்புகள், அலகுத் தேர்வுகள் மற்றும் பாடத் தொகுதித் தேர்வுகளை நடத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் செயலாக்கத்தில் அடங்கும்.

பதிவேடுகளை ஆய்வு செய்ததில், TANEXஐ செயல்படுத்தும் நோக்கத்திற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களுக்கு, ₹ 39.64 இலட்சம் அளிக்கப்பட்டதும், அது அந்தந்த மாவட்டங்களால் செலவு செய்யப்பட்டு, பயன்பாட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது. இருப்பினும், **அட்டவணை 2.3ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களுள் இரண்டில், தேர்ச்சி விழுக்காட்டினை மேம்படுத்துவதில், இத்திட்டம் பயனளிக்கவில்லை.

[1] கடலூர் (235), திருவண்ணாமலை (328), திருவாரூர் (136), வேலூர் (348) மற்றும் விழுப்புரம் (362).

**அட்டவணை 2.3: TANEXன் கீழ் இலக்கை அடையாத மாவட்டங்கள்**

| தேர்வின் பெயர் | மாவட்டம் | தேர்ச்சி விழுக்காடு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2015-16 (அடிப்படை ஆண்டு) | 2016-17 | 2017-18 | 2018-19 |
| மேல்நிலைத் தேர்வு | திருவண்ணாமலை | 90.67 | 91.84 | 87.97 | 88.45 |
| | விழுப்புரம் | 89.47 | 86.36 | 83.35 | 85.85 |

(ஆதாரம்: DGE யிடமிருந்து பெறப்பட்ட தரவு)

இந்த இரண்டு மாவட்டங்களிலும் செயல்திறனை மேம்படுத்த கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2016-17ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தைத் தவிர மற்ற ஆண்டுகளில், இரண்டு மாவட்டங்களிலும் தேர்ச்சி விழுக்காடு குறைந்துள்ளது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

இந்த மாவட்டங்களில் அதிகப்படியான காலியிடங்கள் இருப்பதால் தேர்ச்சி விழுக்காடு குறைந்துள்ளதாக பதிலளித்த அரசு (ஆகஸ்ட் 2022), காலியிடங்களைக் குறைக்க இந்த மாவட்டங்களில் புதிய ஆட்கள் நியமிக்கப்பட்டு வருவதாகக் கூறியது. முக்கியப் பிரச்சினையான ஆசிரியர் காலிப் பணியிடம் இருப்பதைக் காட்டாமல், TANEX திட்டத்தைச் செயல்படுத்தியதால், அந்தத் திட்டம் மிக குறைந்த பலன் கொடுத்து தோல்வியுற்றதாக தணிக்கை கருதுகின்றது.

## 2.4 பள்ளிகளில் இணை கல்விச் செயல்பாடுகள்

GoTNன் கொள்கை மற்றும் புதிய கல்விக் கொள்கை (New Education Policy-NEP), 2020, பாடத்திட்டத்தில் விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சி ஆகியவை இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. மேலும், GoTN மற்றும் NEP ஆகியவை இணை கல்விச் செயல்பாடுகள் (co-scholastic activities) மூலம் ஒவ்வொரு மாணவரிடமும் உள்ள உள்ளார்ந்த திறமைகளைக் கண்டறிந்து, ஊக்குவித்து, வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தணிக்கையானது, 138 மாதிரிப் பள்ளிகளின் இணைக் கல்வி நடவடிக்கைகளின் அடிப்படையிலான செயல்திறனை, ஆய்வு செய்ததன் கண்டுபிடிப்புகள் **அட்டவணை 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4: இணை கல்வி நடவடிக்கைகளில் மாதிரி பள்ளிகளின் செயல்திறன்**
**(எண்களில்)**

| | NCC | NSS | JRC | விளையாட்டுப் போட்டி | பள்ளிகளுக்-கிடையேயான விளையாட்டுப் போட்டி | பள்ளிகளுக்-கிடையேயான அறிவியல் சார்ந்த நடவடிக்கை |
|---|---|---|---|---|---|---|
| அரசு பள்ளி | 8 | 30 | 105 | 29 | 49 | 69 |
| உதவி பெறும் பள்ளி | 7 | 12 | 28 | 10 | 16 | 14 |
| **138 மாதிரி பள்ளிகளின் விழுக்காடு** | ***11*** | ***30*** | ***96*** | ***29*** | ***48*** | ***60*** |

(ஆதாரம்: மாதிரி பள்ளிகளால் வழங்கப்பட்ட தரவு)

அரசு நடத்தும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், இணை கல்விச் செயல்பாடுகளைச் செயல்படுத்தும் திறன் குறைவாகவே இருந்தது **அட்டவணை 2.4ல்** இருந்து தெரியவருகிறது. பள்ளிகளில், இளைஞர் மற்றும்

சுற்றுச்சூழல் மன்ற அமைப்பைத் (Eco and Youth club) தவிர பள்ளிகளின் மற்ற இணைக் கல்வி நடவடிக்கைகளை, தொடர்ந்து கண்காணிக்க, UDISEல் உள்ளளார்ந்த அமைப்பும் (inbuilt tool) அல்லது வேறு எந்த கண்காணிப்புக் கருவியும் (monitoring tool) CEOகள் மற்றும் CSE இடம் இல்லை என்பது கண்டறியப்பட்டது.

இதனால், குழந்தைகளின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரக்கூடிய சூழலை பள்ளிகள் வழங்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்துள்ளது.

EMISன் ஒரு அமைப்பானது, அடுத்த ஆண்டு முதல் இணைக் கல்வி நடவடிக்கைகளைக் கண்காணிக்க உதவுமாறு செயல்படுத்தப்படும் என்று அரசு ஒப்புக்கொண்டது (மே 2022).

## 2.5 முடிவுரை

மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தின் அடிப்படையில், அகில இந்திய அளவில், சிறப்பாக செயல்பட்டாலும், 2016 முதல் 2021 வரையிலான ஆண்டுகளில் அரசு நடத்தும் பள்ளிகளில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர் சேர்க்கை முறையே 14.76 விழுக்காடு மற்றும் 11.84 விழுக்காடு குறைந்தது. தனியார் பள்ளிகளுடன் ஒப்பிடுகையில், அரசுப் பள்ளிகள் தேர்ச்சி விகிதத்தில் மிகவும் குறைவாக உள்ளது. அரசு பள்ளிகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. 11 விழுக்காடு பள்ளிகளில் மட்டுமே NCC இருந்தது மற்றும் 30 விழுக்காடு பள்ளிகளில் மட்டுமே NSS அல்லது வருடாந்திர விளையாட்டு போட்டிகள் போன்ற இணை கல்வி நடவடிக்கைகள் இருந்தன. மொத்தத்தில், அரசுப் பள்ளிகள் செயல்திறன் வெளிப்பாட்டில் (performance outcome), தனியார் பள்ளிகளை விட பின்தங்கியுள்ளன.

## 2.6 பரிந்துரை

- பள்ளி செல்லாத குழந்தைகளை அவ்வப்போது கணக்கெடுத்து, கண்காணிப்பதை அரசு உறுதிசெய்து, அத்தகைய கணக்கெடுப்புகளின் அடிப்படையில் சரியான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

# அத்தியாயம் III

## உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான பள்ளி வசதி

# அத்தியாயம் III

## உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான பள்ளி வசதி

நிதி ஆயோக் வெளியிட்ட பள்ளிக் கல்வித் தரக் குறியீடு (School Education Quality Index-SEQI), 2019 அறிக்கையின்படி, பள்ளிக் கல்வியில், ஒட்டுமொத்த செயல்திறன் தரவரிசையில் மாநிலம், சிறப்பாகச் செயல்பட்டு, இரண்டாவது இடத்தில் இருந்தது. பள்ளி வசதியை பொறுத்தவரை, 93.10 விழுக்காடு மதிப்பெண்களுடன் அகில இந்திய அளவில் மாநிலம் முதலிடத்தில் இருந்தது. சிறந்த ஒப்பீட்டளவிலான செயல்திறன் (Relative Performance) இருந்தபோதிலும், அடுத்த பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி, முன்னுரிமையின் அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டிய சில குறைபாடுகள் அரசுக்கு இருந்தன.

### 3.1 கல்வி வசதி அமைத்தலில் சிக்கல்களைத் தீர்ப்பதில் உள்ள குறைபாடுகள்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வழிகாட்டுநெறிமுறைகள் (Samagra Shiksha Guidelines), ஒவ்வொரு குக்கிராமத்திலும், ஐந்து கிலோ மீட்டர் (கிமீ) சுற்றளவிற்குள் ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஏழு முதல் பத்து கிமீ சுற்றளவிற்குள் ஒரு மேல்நிலைப் பள்ளியும் இருக்க வேண்டும் என்று வழிவகுக்கின்றது. GoTNன் கொள்கையும் (GoTN's Policy) ஐந்து கிமீ சுற்றளவில் ஒரு உயர்நிலைப் பள்ளியையும், எட்டு கிமீ சுற்றளவில் மேல்நிலைப் பள்ளியையும் அமைக்க வலியுறுத்துகிறது. இந்த விதிமுறைகளின்படி பள்ளிகள் அமைந்திருத்தல், உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி வசதிகளை மேம்படுத்தும். புதிய பள்ளிகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை முறையே, உயர்நிலைப் பள்ளிகளாகவும் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல், விடுதிகள் கட்டுதல் மற்றும் மாணவர்களுக்குப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்தல் ஆகியவை, பள்ளி வசதியை அதிகரிக்க, SSல் முன்மொழியப்பட்ட உத்தியாகும்.

தணிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது:

- 31 மார்ச் 2021 நிலவரப்படி, மாநிலத்தில் ஐந்து கிமீ சுற்றளவில் உயர்நிலைப் பள்ளி இல்லாத 2,133 குடியிருப்புகள் இருந்தன. இதேபோல், எட்டு கிமீ சுற்றளவில் மேல்நிலைப் பள்ளி இல்லாத 1,926 குடியிருப்புகள் இருந்தன. இந்த குடியிருப்புகளில் வசிக்கும் பள்ளி வயது குழந்தைகளின் தரவுகளை, CSE அல்லது CEOக்கள் தொகுக்கவில்லை. போதிய பள்ளி வசதி இல்லாத அதிக எண்ணிக்கையிலான குடியிருப்புகளைக் கொண்ட மாவட்டங்கள் **விளக்கப்படங்கள் 3.1 மற்றும் 3.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.1: அரசு உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத குடியிருப்புகளின் எண்ணிக்கை**




**விளக்கப்படம் 3.2: அரசு மேல்நிலைப் பள்ளிகள் இல்லாத குடியிருப்புகளின் எண்ணிக்கை**




(ஆதாரம்: CSE ஆல் வழங்கப்பட்டதரவு)

- UDISE தரவுகளின் பகுப்பாய்வு, மாதிரி மாவட்டங்களில் உள்ள 839 உயர்நிலைப் பள்ளிகளில், 83 பள்ளிகள் (10 விழுக்காடு) (**இணைப்பு 3.1**), அவற்றிலிருந்து ஐந்து கிமீ தொலைவில் சார்புப் பள்ளிகளைக் (feeder schools) கொண்டிருந்தன. இதேபோல், மாதிரி மாவட்டங்களில் உள்ள 790 மேல்நிலைப் பள்ளிகளில், 40 பள்ளிகள் (ஐந்து விழுக்காடு) (**இணைப்பு 3.2**), அவற்றிலிருந்து எட்டு கிமீ தொலைவில் சார்புப் பள்ளிகளைக் கொண்டிருந்தன.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், தொலைதூர கிராமங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு அருகிலுள்ள பள்ளிகளுக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அக்டோபர் 2021ல், 2,133 பள்ளிவசதி இல்லாத குடியிருப்புகளுள் 153ல் (7.17 விழுக்காடு) உள்ள 2,303 மாணவர்களுக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் ஏற்பாடுகளைச் சந்திக்க, CSE, ₹ 69.09 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்தது. 2020-21ஆம் ஆண்டில், SPDயானது, ஒரு மாணவருக்கு ₹ 3,000 வீதம், ஐந்து மாதங்களுக்கு, பள்ளிகள் மூலம் குழந்தைகளின் பெற்றோருக்கு உதவியை வழங்கியது. கல்வி வசதி ஏற்படுத்துதலில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்க, CSE மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் எடுத்த நடவடிக்கைகளை, தணிக்கை ஆய்வு செய்து பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- 15-18 வயதுக்குட்பட்ட பள்ளி வயது உள்ளவர்களைக் கண்டறிய, பள்ளிவசதி இல்லாத குடியிருப்புகளில் (uncovered habitations) கணக்கெடுப்பு எதுவும் நடத்தப்படவில்லை. எனவே, பள்ளிக்கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க, புதிய உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளியைத் திறப்பதற்கு அல்லது ஏற்கனவே உள்ள பள்ளிகளை மேம்படுத்துவதற்கு, தகுதியான/தகுதியற்ற குடியிருப்புகளை GoTN/CSEயால் துல்லியமாக அடையாளம் காண முடியவில்லை. பள்ளிகள் தேவைப்படும் குக்கிராமங்களை அடையாளம் காண பள்ளிகள் மற்றும் குடியிருப்புகளின் GIS தரவுத்தளம் பராமரிக்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (ஆகஸ்ட் 2022). ஆயினும், GIS தரவுத்தளமானது, பள்ளி வயதுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்றும், பள்ளி வசதி மேம்படுத்த, புதிய பள்ளிகளின் இருப்பிடத்தைத் தீர்மானிப்பதில், தூரம் மற்றும் நிலப்பரப்பு பற்றிய தரவு மட்டும் போதுமானதாகாது என்றும் தணிக்கை கண்டறிந்தது.

- பள்ளி வசதி அளிக்கப்படாத குடியிருப்புகளில், போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி அமைக்கப்பட்ட குடியிருப்புகள், 7.17 விழுக்காடாக மட்டுமே இருந்தது. எனவே, மாணவர்களில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே போக்குவரத்து ஏற்பாடுகள் மூலம் பயனடைந்தனர். மற்ற குடியிருப்புகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தைக் கொண்டிருப்பதாக CSEஆல் கருதப்பட்டது. ஆயினும், இதனை உறுதிப்படுத்தும் எந்தப் பதிவும் இல்லை என்று தணிக்கை கண்டறிந்தது.
- இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு, GoTN அல்லது CSE ஆல் வழிகாட்டுநெறிமுறைகள் வழங்கப்படாததால், போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட வேண்டிய குடியிருப்புகளைத் தேர்ந்தெடுக்கும் முறை தற்காலிகமானதாகவே இருந்தது. 2021-22ஆம் ஆண்டில் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக, வழிகாட்டுநெறிமுறைகள் உருவாக்கப்பட்டன என்று GoTN பதிலளித்தது (ஆகஸ்ட் 2022).
- இத்திட்டம் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை மட்டுமே உள்ளடக்கியது. மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.
- போக்குவரத்து உதவிக்காக வழங்கப்படும் பண உதவியானது, பள்ளி தூரத்துடனோ அல்லது போக்குவரத்து ஏற்பாட்டின் தன்மையுடனோ (nature of transport arrangement) இணைக்கப்படவில்லை.
- பெற்றோர்களுக்கு தொகையை மாதாந்திரமாக வழங்குவதைக் காட்டிலும் அதிக சிக்கனமான முறையில் பள்ளிகள் மூலம் போக்குவரத்து ஏற்பாடு செய்ய எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

உண்மை நிலவரத்தைப் தெரிந்துகொள்வதற்காக, கோயம்புத்தூர் மாவட்டத்தில், பள்ளி வசதிகள் வழங்கப்படாத இரண்டு குடியிருப்புகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தின், சின்னம்பதி குடியிருப்பில், 35 பள்ளி செல்லும் குழந்தைகளுடன் 80 குடும்பங்கள் வசித்து வந்தனர். அருகிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளயானது எட்டு கி.மீ தொலைவிலும், அருகிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி 13 கி.மீ தொலைவிலும் இருந்தன. கிராமத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை பேருந்து இணைப்பு இருந்தது, ஆனால், பேருந்து நேரம் பள்ளி நேரத்துடன் பொருந்தவில்லை. எனவே, தனிப்பட்ட போக்குவரத்து வசதிகள் உள்ள குடும்பங்கள் மட்டுமே தங்கள் சொந்த வாகனங்களில் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகின்றனர். தொண்டமுத்தூர் ஊராட்சி ஒன்றியம், மாதவராயபுரம் கிராமத்தில், ஆறு குடியிருப்புகள் பள்ளி வசதிகள் கொண்டிருக்கவில்லை. இந்த குடியிருப்புகள் அருகிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து 10 முதல் 15 கிமீ தொலைவில் அமைந்திருந்தன. நிலையான சாலை இணைப்பு (all-weather road connection) இல்லாத வனப்பகுதியாக இருப்பதால், இக்கிராமங்களின் குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல அரசு வனத்துறையின் வாகனங்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இந்த குக்கிராமங்களில் உள்ள பள்ளி வயது மாணவர்களின் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்றும், இந்த மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான எந்த முன்மொழிவும் வைக்கப்படவில்லை என்றும் தணிக்கை கண்டறிந்துள்ளது.

எனவே, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான பள்ளி வசதியானது அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு தொடர்ந்து கிடைக்கப்பட முடியாமலேயே

இருப்பதைத் தணிக்கை கண்டறிந்தது. பள்ளி வசதியற்ற குடியிருப்புகளிலுள்ள பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகளின் நம்பகமான தரவு இல்லாமையால், SSன்கீழ் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் ஏற்பாடுகளுக்கான குறுக்கீடுகள் போதுமானதாக இல்லை மற்றும் **பத்தி 3.2**ல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளபடி, பள்ளிகளை நிறுவுதல்/தரம் உயர்த்துதல் ஆகியவை வலுவான அளவையின் அடிப்படையில் இல்லை.

SSன் கீழ் உள்ள கூறுகளைப் பெறுவதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க GoI க்கு கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்று அரசு பதிலளித்தது (மே 2022), மேலும் மலைப்பாங்கான வாழ்விடங்களை அடையாளம் கண்டு உரிய வசதிகளை வழங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியது.

## 3.2 விதிமுறைகளை பின்பற்றாமல் பள்ளிகளை தரம் உயர்த்துதல்

SSன் கீழும், சொந்த நிதியைப் பயன்படுத்தியும், தேவையின் அடிப்படையில், GoTN இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துகிறது. மே 1997ல், GoTN பள்ளிகளை மேம்படுத்துவதற்கான அளவுகோல்களையும் விதிமுறைகளையும் நிர்ணயித்தது. தரம் உயர்த்துதலுக்கான அளவுகோலானது, மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அருகிலுள்ள பள்ளிகளுக்கான தூரம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது (**அட்டவணை 3.1**).

**அட்டவணை: 3.1 பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கான விதிமுறைகள்**

| வ. எண் | அளவுகோல்கள் | இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தல் | உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி யாக தரம் உயர்த்தல் |
|---|---|---|---|
| 1 | மாணவர்களின் எண்ணிக்கை | முன்மொழியப்பட்ட பள்ளியில் 8ஆம் வகுப்பில் 50 மாணவர்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது | முன்மொழியப்பட்ட பள்ளியில் 10ஆம் வகுப்பில் 100 மாணவர்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது |
| 2 | பொது பங்களிப்பு | ₹ 1 இலட்சம் | ₹ 2 இலட்சம் |
| 3 | நிலப்பரப்பு | மாநகராட்சி - 6 கிரவுண்ட்; மாவட்ட தலைமையகம்- 8 கிரவுண்ட்; டவுன் பஞ்சாயத்து -10 கிரவுண்ட்; நகராட்சி -1 ஏக்கர்; கிராமப்புறங்கள் - 3 ஏக்கர் | |
| 4 | அருகாமையில் உள்ள பள்ளிகள் | அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிக்கான குறைந்தபட்ச தூரம் - 5 கி.மீ. | அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு குறைந்தபட்ச தூரம் - 8 கி.மீ. |

(ஆதாரம்: அரசு ஆணை மற்றும் தொடர் திருத்தம்)

SSன் கீழ் பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கு, மேற்கூறிய விதிமுறைகளை பின்பற்றுமாறு GoI வலியுறுத்துவதால், 2016-21 வரையிலான காலக்கட்டத்தில், GoTN, மேற்கூறப்பட்ட விதிமுறைகளை கட்டாயமாகப் பின்பற்றி, SSன் கீழ் 27 பள்ளிகளை தரம் உயர்த்தியது. கூடுதலாக, 2017-21 வரையிலான காலக்கட்டத்தில், GoTN 281 இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 247 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியது. இந்தப் பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறையின் ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

(i) தரம் உயர்த்தப்பட்ட 281 உயர்நிலைப் பள்ளிகளில் 173ல் (62 விழுக்காடு), (**இணைப்பு 3.3**) மேம்படுத்தலுக்கான தூரம் மற்றும் மாணவர் எண்ணிக்கை போன்ற விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை (**விளக்கப்படம் 3.3**). இதேபோல்,

தரம் உயர்த்தப்பட்ட 247 மேல்நிலைப் பள்ளிகளில் 164ல் (66 விழுக்காடு) (**இணைப்பு 3.4**) தூரம் மற்றும் மாணவர் எண்ணிக்கை போன்ற விதிமுறைகளை பூர்த்தி செய்யப்படவில்லை. இந்தப் பள்ளிகளை தரம் உயர்த்துவது முற்றிலும் நியாயமற்றது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

**விளக்கப்படம் 3.3: விதிமுறைகளைப் பின்பற்றாமல் பள்ளிகளை தரம் உயர்த்துதல்**

**281 உயர்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்துதல்**




**247 மேல்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்துதல்**




(ஆதாரம்: CSE மற்றும் UDISEல் இருந்து பெறப்பட்ட விவரம்)

(ii) தரம் உயர்த்தப்பட்ட 281 உயர்நிலைப் பள்ளிகளில், 25 (10 விழுக்காடு) (**இணைப்பு 3.5**) மற்றும் தரம் உயர்த்தப்பட்ட 247 மேல்நிலைப் பள்ளிகளில் 37 பள்ளிகள்(15 விழுக்காடு) (**இணைப்பு 3.6**) தரம் உயர்த்தப்படுவதற்கு போதுமான மாணவர் எண்ணிக்கையை பெற்றிருந்த போதிலும், தூரத்திற்கான விதிமுறையை நிறைவு செய்யவில்லை. மேலும், தரம் உயர்த்தப்பட்ட இந்த 528 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 72 (14 விழுக்காடு) பள்ளிகள், ஏராளமான பள்ளிகளும் மாணவர்களுக்கென்று அளிக்கப்படும் இலவச பொதுப் போக்குவரத்து வசதிகளும் கொண்ட நகர்ப்புறங்களிலேயே இருந்தன. எனவே, இந்தப் பள்ளிகளை தரமுயர்த்துவது என்பது நியாயமற்றது என்று தணிக்கை கண்டறிந்தது.

(iii) விதிமுறைகளை கடைபிடிக்காமல் தரம் உயர்த்தப்பட்ட 528 பள்ளிகளில், 140 பள்ளிகள் (27 விழுக்காடு), தூரத்தின் விதிகளைப் பின்பற்றாமல், 3 கி.மீக்குள்ளாகவே வேறு பள்ளியையும், 310 பள்ளிகள் (59 விழுக்காடு) ஐந்து கி.மீக்குள்ளாகவே வேறு பள்ளியையும் ஏற்கனவே கொண்டிருந்தன. UDISEன் புவி நிலைப்படுத்துதல் கருவியைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்ட ஒரு எடுத்துக்காட்டு நேர்வு **விளக்கப்படம் 3.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(iv) தரம் உயர்த்தப்பட்ட 281 உயர்நிலைப் பள்ளிகளில் 77 பள்ளிகள் (27 விழுக்காடு) (**இணைப்பு 3.7**) மற்றும் தரம் உயர்த்தப்பட்ட 247 மேல்நிலைப் பள்ளிகளில் 39 பள்ளிகள் (16 விழுக்காடு) (**இணைப்பு 3.8**) தரம் உயர்த்துவதற்கான தூரத்திற்கான விதிமுறையை எட்டியிருந்தும், மாணவர்கள் எண்ணிக்கைக்கான விதிமுறையை எட்டாதிருந்தன.

**விளக்கப்படம் 3.4: ஏற்கனவே உள்ள பள்ளியிலிருந்து 1.83 கிமீ தொலைவில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட பள்ளியின் (குறைந்த மாணவர் சேர்க்கையுடன்) எடுத்துக்காட்டு**




(ஆதாரம்: UDISE புவியியல் தரவு)

(v) ஜனவரி 2021ல், 2021ஆம் ஆண்டு மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான நடத்தை விதிகளானது (Code of Conduct for the State Assembly) நடைமுறைக்கு வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாக, GoTN, 36 இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 45 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியது. தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் பட்டியலில், 17 ஊராட்சி ஒன்றியங்களின் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கியிருப்பதை தணிக்கை கண்டறிந்தது. அவை, SPDக்கு, முன்பே அனுப்பப்பட்ட முன்மொழிவில் (பிப்ரவரி 2020), CSEஆல் தரம் உயர்த்தப்படுவதற்குப் 'பரிந்துரைக்கப்படவில்லை' என்று குறிக்கப்பட்டவையாகும். இதேபோல், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 20 உயர்நிலைப் பள்ளிகளும், தரம் உயர்த்துவதற்காக SPDக்கு அனுப்பப்பட்ட முந்தைய முன்மொழிவில் (பிப்ரவரி 2020) CSE ஆல் குறிப்பாக 'பரிந்துரைக்கப்படவில்லை' எனக் குறிக்கப்பட்டவையாகும். ஆனால், GoTN, தன்னிச்சையாக, எந்தவித காரணமும் இல்லாமல், இந்த பள்ளிகளை தரம் உயர்த்தியது. எனவே, இந்த தரம் உயர்த்தல்கள், தகுதியின் அடிப்படையில் அல்லாமல் புறம்பான காரணங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(vi) **பத்தி 3.1**ல் விவாதிக்கப்பட்டபடி, மார்ச் 2021 நிலவரப்படி, மாதிரி மாவட்டங்களில் உள்ள இடைநிலைப் பள்ளிகளில் 10 விழுக்காடும், உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்து விழுக்காடும், அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து முறையே, ஐந்து மற்றும் எட்டு கிமீ தொலைவில் இருந்தன. இவற்றில் பெரும்பாலான பள்ளிகள் தொலைதூரப் பகுதிகளில் அமைந்திருந்தன. ஆயினும், தொலைதூரப் பகுதிகளில், (remote areas) இதேபோல் அமைக்கப்பட்டுள்ள ஏராளமான பள்ளிகள் தரம் உயர்த்தப்படாத நிலையில், 515 பள்ளிகளை நிர்ணயித்த விதிமுறைகளை பின்பற்றாமல் GoTN தரம் உயர்த்தியது.

(vii) விதிகளை கடைபிடிக்காமல் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு, **அத்தியாயம் IV**ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, போதிய உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவில்லை. எனவே, போதிய உள்கட்டமைப்பு இல்லாத நிலையில், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு, தரம் உயர்த்துதல் எந்தவித பங்கும் அளிக்கவில்லை.

எனவே, **பத்தி 3.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, தொடர்ந்து புறக்கணிக்கபட்ட நிலையில் பள்ளி வசதியற்ற குக்கிராமங்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்க, குறிப்பிடப்பட்ட விதிமுறைகளை முற்றிலும் புறக்கணித்து, தொடர்பற்ற காரணங்களால் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதாக தணிக்கை கண்டறிந்தது.

பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கு, மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மற்றும் இயற்கையான தடைகள் பரிசீலிக்கப்பட்டதாக அரசு தெரிவித்தது (மே 2022). மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தூரம் தவிர, கல்வியில் பின்தங்கிய, ஏழை மற்றும் பட்டியல் வகுப்பினரின் (scheduled caste people) மக்கள்தொகையையும், பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் போது கருத்தில் கொள்ளப்பட்டதாக GoTN தெரிவித்தது (ஆகஸ்ட் 2022). ஆயினும், மேம்படுத்தலுக்கான முன்மொழிவுகளில், இவ்விடங்களில் உள்ள கணிசமான எண்ணிக்கையிலான பயன்பெறக்கூடிய மக்கள் தொகை குறித்த எந்தப் பகுப்பாய்வும் இல்லை என்று தணிக்கை கண்டறிந்தது. இந்தப் பதில் அரசின் கொள்கைக்கு முரணானது மட்டுமல்லாமல், தரம் உயர்த்துவதற்கான பள்ளிகளைத் தேர்வு செய்வது எந்த நிலையான விதிமுறைகளைப் பயன்படுத்தியும் செய்யப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

## 3.3 மாற்றுத்திறனாளிகளுக்கான கைப்பிடிகளுடன் கூடிய சாய்வு பாதைகள் இல்லாதமை

பள்ளிகளுக்கு தடையில்லா பள்ளி கட்டமைப்பு வசதிகள் (barrier-free access) அமைத்தல் என்பது கல்வி பெறுதலின் ஒரு பகுதி என அரசால் கருதப்படுகிறது. சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு (Children with Special needs - CwSN), தடையற்ற பள்ளி கட்டமைப்பு வசதிகள் உறுதி செய்யும் நோக்கில், பள்ளிகளில் கைப்பிடியுடன் கூடிய சாய்வுப் பாதைகள் (ramps with handrails) இருக்க வேண்டும். மாதிரி 108 அரசுப் பள்ளிகளில், 11 பள்ளிகளில் (10 விழுக்காடு) 107 CwSN மாணவர் சேர்க்கை இருந்தும் கைப்பிடியுடன் கூடிய சாய்வுப் பாதைகள் இல்லை.

தணிக்கைக் காலத்தில், 2020-21 வரயிலான காலக்கட்டத்தில், 784 பள்ளிகளில், சாய்வுப் பாதைகளை அமைக்க, SS திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ₹ 7.84 கோடியைத் தவிர, சாய்வுப் பாதைகளை அமைப்பதற்காக பிரத்தியேகமாக எந்த நிதியையும் GoTN வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, CwSNக்கான தடையில்லா பள்ளி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த போதுமான நிதி தேவைப்படும் என்று தணிக்கை கருதுகிறது.

## 3.4 முடிவுரை

பள்ளிக் கல்வித் தரக் குறியீடு (SEQI), 2019ன் படி, பள்ளிக் கல்விக்கான வசதி வழங்குவதில், அகில இந்திய அளவில் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இவ்விதமான செயல்திறன் இருந்தபோதிலும், மாநிலத்தில் ஐந்து கிமீ சுற்றளவில் உயர்நிலைப் பள்ளி இல்லாத 2,133 குடியிருப்புகளும், எட்டு கிமீ சுற்றளவில்

மேல்நிலைப் பள்ளி இல்லாத 1,926 குடியிருப்புகளும் உள்ளன. இந்த பள்ளி வசதி வழங்கப்படா குடியிருப்புகளில் உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு மாறாக, GoTN 528 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த அனுமதித்தது, அவற்றில் 515 பள்ளிகளில் தரம் உயர்த்துவதற்கென பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

## 3.5 பரிந்துரைகள்

- போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகளை அதிக மாணவர்களுக்கு அளிப்பதன் மூலமாகவும், தங்கும் வசதி கொண்ட பள்ளிகள் போன்ற பிற வழிகளைக் கண்டுபிடிப்பதன் மூலமாகவும், பள்ளி வசதிகள் அளிக்கப்படாத குடியிருப்புக்களில் மாணவர்களைச் சேர்த்தலுக்கான பள்ளி வசதிகள் அதிகரிப்பதை அரசு உறுதி செய்யலாம்.
- பள்ளிகளை தரம் உயர்த்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்யலாம், மேலும், மேம்பட்ட பள்ளி வசதியின் நலன் கருதி தொலைதூர இடங்களில், ஏற்கனவே உள்ள விதிமுறைகள் மறுபரிசீலனை (revisit) செய்யப்படுவதை உறுதி செய்யலாம்.

# அத்தியாயம் IV

# பள்ளிக் கல்வியின் தரம்

# அத்தியாயம் IV

# பள்ளிக் கல்வியின் தரம்

## 4.1 பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு

உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான[1], 2016-2021 வரையிலான ஆண்டுகளுக்கான செலவினங்கள் **அட்டவணை 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1: உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான செலவுனம்**

**(₹கோடியில்)**

| ஆண்டு | GoTNன் நிதி | SS/SCERT-TN (GoI மற்றும் GoTN ஆகியவற்றால் இணைந்து நிதி அளிக்கப்பட்டுள்ளது) | மொத்தம் |
|---|---|---|---|
| 2016-17 | 10,750.54 | 1,490.12 | 12,240.66 |
| 2017-18 | 11,552.88 | 1,537.48 | 13,090.36 |
| 2018-19 | 13,299.97 | 1,916.01 | 15,215.98 |
| 2019-20 | 14,555.91 | 3,007.56 | 17,563.47 |
| 2020-21 | 13,980.66 | 2,871.68 | 16,852.34 |

(ஆதாரம்: GoTNன் நிதி கணக்கு)

SS மற்றும் SCERT-TNன் கீழ், 2016-21 வரையிலான ஆண்டுகளுக்கான செலவினங்கள் 92 விழுக்காடு அதிகரித்திருந்தாலும், மாநிலத்தின் நிதியிலிருந்து முழுமையாகச் சந்திக்கப்பட்ட செலவு 30 விழுக்காடு மட்டுமே அதிகரித்திருந்தது. தொடர்ந்து வந்த தேசியக் கல்விக் கொள்கைகள், கல்விக்கான பொதுச் செலவினங்களை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஆறு விழுக்காடு அளவிற்கு உயர்த்தி, கல்வி வசதி மற்றும் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இதை அடைய, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி உள்ளிட்ட கல்விக்கான செலவினங்களை அதிகரிக்க வேண்டும். ஆயினும், 2016-17ல் GSDPன் விழுக்காடாக செலவினமானது, 0.94லிருந்து 2020-21ல் 0.85ஆகக் குறைந்துள்ளது.

எனவே, மாநிலத்தில் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்கு, GoTN, நிதி ஒதுக்கீட்டில் போதுமான முன்னுரிமையை வழங்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 4.2 மனித வளங்கள்

தரமான கல்வியை வழங்குவதற்கு பள்ளிகளில் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் மற்றும் வட்ட, மாவட்ட மற்றும் மாநில அளவிலான அலுவலகங்களில் நிர்வாக ஊழியர்கள் அவசியம். ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத

[1] உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், தொடக்கநிலை மற்றும் நடுநிலைப் பிரிவுகளுக்கான செலவினங்களும் அடங்கும்.

பணியாளர்களை பணியமர்த்துவது தொடர்பான சிக்கல்கள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்படுகின்றன.

### 4.2.1 பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை

மார்ச் 2022 நிலவரப்படி, GHSகள் மற்றும் GHSSகளில் அனுமதி அளிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பதவியில் உள்ள நபர்களின் (Persons-in-Position - PIP) எண்ணிக்கை **அட்டவணை 4.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2: அனுமதி அளிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் PIP எண்ணிக்கை (2021-22)**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதி அளிக்கப்பட்ட எண்ணிக்கை | பதவியில் உள்ள நபர் | காலி பணியிடங்கள் | காலி பணியிடங்கள் (விழுக்காடு) |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமை ஆசிரியர் (HSS) | 2,922 | 2,509 | 413 | *14* |
| 2 | தலைமை ஆசிரியர் (HS) | 3,116 | 2,668 | 448 | *14* |
| 3 | முதுகலை உதவியாளர் | 26,717 | 24,042 | 275 | *10* |
| 4 | இளங்கலை ஆசிரியர் உதவியாளர் | 56,275 | 52,127 | 4,148 | *7* |
| 5 | இரண்டாம் நிலை உதவியாளர் | 7,137 | 5,711 | 1,426 | *20* |
| 6 | உடற்கல்வி ஆசிரியர் | 4,831 | 3,409 | 1,422 | *29* |
| 7 | இளங்கலை ஆசிரியர் (BT) தமிழ் பண்டிதர் | 10,218 | 4,499 | 5,719 | *56* |
| 8 | இளங்கலை ஆசிரியர் - மற்ற பண்டிதர்* | 178 | 99 | 79 | *44* |
| 9 | கணினி பயிற்றுவிப்பாளர் | 1,967 | 1,697 | 270 | *14* |
| 10 | தொழிற்கல்வி பயிற்றுவிப்பாளர் | 2,098 | 949 | 1,149 | *55* |
| 11 | சிறப்பு ஆசிரியர்கள்** | 3,455 | 2,342 | 1,113 | *32* |
| | **மொத்தம்** | **1,18,914** | **1,00,052** | **18,862** | ***15.87*** |

* கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் உருது

** வரைதல், இசை மற்றும் தையல்

(ஆதாரம்: CSEன் பதிவுகள்)

தணிக்கை காலியிட நிலையை ஆய்வு செய்து பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

➢ **அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பற்றாக்குறை:** 1997, 2010 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் பல்வேறு அரசு ஆணைகள் மூலம், உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணிக்கான நெறிமுறைகளை GoTN நிர்ணயித்தது. ஒன்பது மாதிரி மாவட்டங்களில், ஆசிரியர்களின் தேவை அடிப்படையிலான பணியிடங்களின் மதிப்பீடு (need based requirement), உண்மையான அனுமதியளிக்கப்பட்ட எண்ணிக்கையான 17,855க்கு எதிராக 19,751 ஆக இருந்தது. எனவே, தேவை அடிப்படையிலான உண்மையான அளவு, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையை விட 10.62 விழுக்காடு அதிகமாக இருந்தது. மாநில அளவில், GHS மற்றும் GHSSகளில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களானது, தேவை அடிப்படையிலான அளவை விட 12,628 குறைந்திருந்ததாக தணிக்கை மதிப்பிட்டுள்ளது. தேவை (12,628 பணியிடங்கள்) மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிரான காலியிடங்கள் (18,862) ஆகியவற்றுடன் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் மதிப்பிடப்பட்ட பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு மதிப்பிடுகையில், PIPயானது

உண்மையான தேவையை விட 31,490 ஆக குறைந்துள்ளது. இதனால், பள்ளிகளில் ஆட்கள் பற்றாக்குறையாக இருப்பதை தணிக்கை கண்டறிந்தது.

- **காலி பணியிடங்களின் அளவு:** மொத்த காலியிடங்கள் 15.87 விழுக்காடாக இருக்கையில், BT தமிழ் ஆசிரியர்கள் மற்றும் BT பிற மொழி ஆசிரியர்களின் காலியிடங்கள் முறையே 56 மற்றும் 44 விழுக்காடாக இருந்தது. தொழிற்கல்வி பயிற்றுனர்களின் காலியிடங்களும் மிக அதிகமாக 55 விழுக்காடாக இருந்தது. இருப்பினும், அதிக விழுக்காடு காலியிடங்களைக் கொண்ட பதவிக்கு எதிராக, ஒப்பந்த ஆசிரியர்களை சேர்ப்பதற்கான எந்த முறைமையும் CSEயிடம் இல்லாததால் ஆட்சேர்ப்பு தாமதமாகிறது.

- **ஆட்சேர்ப்பில் தாமதம்:** ஆசிரியர்கள் தேர்வு வாரியம் (Teachers Recruitment Board - TRB), CSE அனுப்பிய தேவைகளின் அடிப்படையில் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கிறது. ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலியிடங்கள் வருடாந்தர நடைமுறையாக இருந்தாலும், ஆட்சேர்ப்பு வருடாந்தரமுறையில் செய்யப்படாததால் பள்ளிகளில் அதிக எண்ணிக்கையிலான காலியிடங்கள் காணப்படுகின்றன. 2016-2021ஆம் ஆண்டில், CSE ஆனது முதுகலை பட்டதாரி (PG) ஆசிரியர்களுக்கான மூன்று ஆட்சேர்ப்பு செயல்முறைகளையும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஒரே ஒரு ஆட்சேர்ப்பு செயல்முறையையும் மட்டுமே செயல்படுத்தியது. மேலும், உடற்கல்வி ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்பு செயல்முறை எதுவும் தொடங்கப்படவில்லை. செப்டம்பர் 2020ல், GoI, பள்ளிகளில் உள்ள காலியிடங்களைக் கூர்ந்து நோக்கி இச்சிக்கலைத் தீர்க்க தொழில்நுட்ப அடிப்படையிலான விரிவான ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு திட்டமிடல் மற்றும் முன்னறிவிப்பு முறையை நிறுவுமாறு GoTNக்கு பரிந்துரைத்தது. இருப்பினும், CSE, அத்தகைய முறையை செயல்படுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தவறியது, இது TRBக்கு தேவைகளைக் குறித்து முன்னறிவிப்புத் தருவதில் குறைப்பாட்டிற்கு வழிவகுத்தது. மேலும், 2018ல் அறிவிக்கப்பட்ட முதுநிலை ஆசிரியர்களின் (PG) ஆட்சேர்ப்பு, மார்ச் 2022 இறுதியில் கூட முழுமையடையாமல் இருந்ததால், TRBன் ஆட்சேர்ப்பு செயல்முறைகள் தாமதமாகின. மேலும், ஆட்சேர்ப்பு செயல்முறைகள் சட்டரீதியான சிக்கல்களால் அடிக்கடி தாமதமாகின்றன. பணியாளர்களின் சேர்க்கையில் இருந்த கால தாமதம் காரணமாக 2016-21 காலகட்டத்தில், அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கும் PIPக்கும் இடையிலான இடைவெளி கூடிக்கொண்டு செல்வதை **விளக்கப்படம் 4.1** விளக்குகிறது.

விளக்கப்படம் 4.1: அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் PIP உடன் ஒப்பீடு




(ஆதாரம்: CSEன் பதிவுகள்)

இவ்வாறு, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் பற்றாக்குறை, மற்றும் பணி நியமனத்தில் தாமதம் போன்ற காரணங்களினால் போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் இல்லாததால், இறுதியில் அரசுப் பள்ளிகளின் கல்வித் தரம் பாதிக்கப்பட்டது.

### 4.2.2 தொழிற் பயிற்சியாளர்களின் காலியிடங்கள்

இளைஞர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில், GoTN, 2018-19 முதல் பள்ளிக் கல்வியை தொழில்மயமாக்கல் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உயர்நிலை மற்றும் மேல்நிலை காலகட்டங்களில் தொழிற்கல்வி பாடங்கள் கூடுதல் அல்லது கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்கள்/திறன் பயிற்றுனர்கள் தேர்வு செய்யப்பட்டு, பள்ளிகளில் தொழிற்பயிற்சி வழங்குநர்களாக (Vocational Training Providers - VTPs) பணியமர்த்தப்படுகிறார்கள். சம்மந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர் (HM), தொழிற்கல்வி படிப்புகளின் தடையற்ற ஒருங்கிணைப்பையும் திறம்பட செயல்படுத்துவதையும் உறுதி செய்வதற்காக திட்டத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார்.

விவசாயம், ஆடை தயாரித்தல், வீட்டு அறைகலன்கள் (Home furnishing), வாகனம், அழகு மற்றும் ஆரோக்கியம் போன்ற தொழில்சார் படிப்புகள் 184 பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு பள்ளிக்கு இரண்டு பிரிவுகள் என்ற விகிதத்தில் மொத்தம் 368 VTP பதவிகள் அனுமதிக்கப்பட்டன. ஆனால், 315 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 53 பணியிடங்கள் 53 பள்ளிகளில் பிப்ரவரி 2022 வரை பின்வரும் **அட்டவணை 4.3**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி காலியாக வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 4.3: பிரிவு வாரியான VTP காலியிடங்களின் விவரங்கள்

| பிரிவின் பெயர் | VTP காலியிடங்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வேளாண்மை | 10 | 880 |
| ஆடை, அலங்காரம் மற்றும் வீட்டு அறைகலன்கள் | 5 | 400 |
| வாகனம் | 6 | 532 |
| அழகு மற்றும் ஆரோக்கியம் | 10 | 836 |
| மின்னணுவியல் மற்றும் வன்பொருள் | 11 | 1,078 |
| உணவு பதப்படுத்தும்முறை | 5 | 400 |
| பல திறமை அடிப்படை பாடப்பிரிவு | 6 | 717 |
| **மொத்தம்** | **53** | **4,843** |

(ஆதாரம்: SPஆல் வழங்கப்பட்ட தரவு)

53 VTPகள் ஈடுபடாதது காரணமாக 4,843 தொழிற்கல்வி மாணவர்களை முறையாகப் பயிற்சிபெற செய்ய இயலவில்லை என்று தணிக்கையில் கண்டறியப்பட்டது.

NEPன் கீழ் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தை மறுஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் முடிவுக்காகக் காத்திருப்பதால், VTPகள் பணியமர்த்தப்படவில்லை என்று அரசு பதிலளித்தது (ஆகஸ்ட் 2022). பள்ளிகளில் தொழிற்கல்வித் திட்டங்களைத் தொடங்கிய பிறகு, தொழிற்கல்வியின் அவசியத்தைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட மறுபரிசீலனை, அரசு மட்டத்தில் கொள்கைக் குழப்பத்தை சுட்டிக்காட்டியது, இது இறுதியில் 4,843 தொழிற்கல்வி மாணவர்களை பாதித்தது.

### 4.2.3 சிறப்புக் கல்வியாளர்களின் பற்றாக்குறை

ஊனமுற்றோருக்கான உயர்நிலைக் கல்வி (Inclusive Education for Disable at Secondary Stage - IEDSS) திட்டமானது, அனைத்து ஊனமுற்ற மாணவர்களும் எட்டு ஆண்டு தொடக்கப் பள்ளிப் படிப்பை முடிப்பதையும், நான்கு ஆண்டுகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்க (9 முதல் 12 வரை) வாய்ப்பு அளிப்பதையும், கற்றல் சூழலில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

IEDSSன் கீழ் சிறப்புக் கல்வியாளர்கள் (Special Educators- SE) சிறப்புத் தேவைகள் கொண்ட மாணவர்களை (Children with Special needs - CwSN) அடையாளம் கண்டு அவர்களை GHS/GHSSல் சேர்ப்பதற்காக நியமிக்கப்பட்டனர். அவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், மற்றும் CwSNக்கு SEன் சேவைகள் தேவைப்பட்டால் மாணவர்களின் வீட்டிற்கும் செல்ல வேண்டும். GoTN ஆனது, பள்ளிகளில் IEDSSஐ செயல்படுத்த 202 SE பதவிகளை உருவாக்கியது (ஜனவரி 2015).

திட்ட வழிகாட்டுதநெறிமுறைகளின்படி, ஐந்துக்கும் மேற்பட்ட CwSN ஐக் கொண்ட எந்தப் பள்ளியும் ஒரு SEஐ நியமிக்க வேண்டும். 33 மாவட்டங்களில் மொத்தம் 194 SEகள் நியமிக்கப்பட்டுள்ளனர் மற்றும் இந்த மாவட்டங்களில் SEகள் மற்றும் CwSN விகிதம் 1:39 மற்றும் 1:1425 இடையே இருந்தது.

SEகளின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, ஒரு பள்ளிகக்கு பதிலாக, பள்ளிகளின் குழுமத்திற்கு அவர்கள் பொறுப்பளிக்கப்பட்டனர். மேலும், CwSN தேவைகளுக்காக அவர்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதாக அரசு பதிலளித்தது (மே 2022).

### 4.2.4 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் பகுத்தறிந்து ஒதுக்கப்படாதமை

மார்ச் 2021 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட 4,831 உடற்கல்வி ஆசிரியர் (Physical Education Teacher - PET) பணியிடங்களில், 3,409 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தேர்வு செய்யப்பட்ட 108 GHS/GHSSல், 73 பள்ளிகளில் மட்டுமே PETக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2021 நிலவரப்படி, மொத்தம் 10,064 மாணவர்களைக் கொண்ட 35 பள்ளிகளுக்கு (48 விழுக்காடு) PET பதவி அனுமதிக்கப்படவில்லை. மேலும், PET பணியிடம் அனுமதிக்கப்பட்ட 73 பள்ளிகளில் கூட, 24,404 மாணவர்களைக் கொண்ட 32 பள்ளிகளில் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

மேலும், 14 மாதிரி பள்ளிகள், 17 PET பணியிடங்களைக் கொண்டிருந்தன மற்றும் 10 PETகள் எந்த விளையாட்டு மைதானமும் இல்லாத பள்ளிகளில் இருந்ததை பகுப்பாய்வு சுட்டிக்காட்டியது.

PETகளின் அதிக எண்ணிக்கையிலான காலியிடங்ளின் காரணத்தாலும், **பத்தி 4.3.4ல்** விவரிக்கப்பட்டபடி விளையாட்டு மைதானங்கள் இல்லாததாலும், GHS மற்றும் GHSSகள் விளையாட்டு மற்றும் போட்டிகளில் செயல்திறன் பாதிக்கப்பட்டது (**பத்தி 2.4**).

எனவே, PETகளின் பற்றாக்குறை, பள்ளிகளில் இணை பாடத்திட்ட செயல்பாடுகளை பாதித்தது. அதன் விளைவாக GHS மற்றும் GHSSகளில் அளிக்கப்பட்ட கல்வியின் தரம் முழுமையற்றதாக இருந்தது.

பகுதி நேர PETகளை ஈடுப்படுத்த முன்மொழியப்பட்டதாக அரசு தெரிவித்தது (மே 2022).மேலும், 801 PET களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான செயல்முறை ஆகஸ்ட் 2022ல் தொடங்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது (ஆகஸ்ட் 2022).

### 4.2.5 ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்பாதது

#### *(i) ஆய்வக உதவியாளர்கள்*

ஆய்வக உதவியாளர்கள் (Laboratory Assistants - LAக்கள்), ஆய்வக உபகரணங்கள் மற்றும் (நுண்ணோக்கிகள், மாதிரிகள், கண்ணாடி கருவிகள் முதலியன), ஆய்வக நுகர்வுப் பொருட்களுக்கான இருப்புப் பதிவேடுகளை பராமரிப்பதற்கும், நடைமுறை வகுப்புகள் மற்றும் தேர்வுகளின் போது ஆசிரியர்களுக்கு உதவுவதற்கும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மார்ச் 2021 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட 6,370 LAக்கள் பணியிடங்களில், 1,750 பணியிடங்கள் காலியாக வைக்கப்பட்டுள்ளன (27.5 விழுக்காடு).

108 மாதிரி அரசுப் பள்ளிகளில்,

- 81 பள்ளிகளுக்கு 93 LA பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன,
- அனுமதிக்கப்பட்ட 93 பணியிடங்களில் 20 இடங்கள் நிரப்பப்படவில்லை, மற்றும்
- 27 பள்ளிகளுக்கு LA பதவி அனுமதிக்கப்படவில்லை.

பள்ளிகளில் காலியிடங்கள் மற்றும் LA பணியிடங்களை அனுமதிக்காததால், LAக்களின் பணியை ஆசிரியர்களே மேற்கொள்ள வேண்டியிருந்தது. இது பள்ளிகளில் அறிவியல் கல்வியை பாதித்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

### *(ii) உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் பதிவு எழுத்தர்*

அரசுப் பள்ளிகளில் உள்ள உதவியாளர்/ இளநிலை உதவியாளர் (Junior Assistant - JA) மற்றும் பதிவு எழுத்தர் (Record Clerk - RC) ஆகிய ஆசிரியர் அல்லாத பணிகளுக்கான நெறிமுறைகளை **அட்டவணை 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி GoTN நிர்ணயித்துள்ளது (மார்ச் 2020).

**அட்டவணை 4.4: அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை அனுமதிப்பதற்கான நெறிமுறைகள்**

| பதவி | மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | **500ன் கீழ்** | **501-2,000** | **2,000க்கு மேல்** |
| உதவியாளர்/JA | 1 | | 2 |
| பதிவு எழுத்தர் | இல்லை | 1 | |

(ஆதாரம்: அரசாணை)

தணிக்கை, அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை நிலையை ஆய்வு செய்து, பின்வருவனவற்றைக் கண்டறிந்தது **(அட்டவணை 4.5):**

**அட்டவணை 4.5: அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத பணியிடங்களின் பணியாளர் எண்ணிக்கை விவரங்கள்**

| பதிவு எழுத்தர் | | | உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் | | |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்டது | நிரப்பப்பட்டது | காலியிடம் (விழுக்காடு) | அனுமதிக்கப்பட்டது | நிரப்பப்பட்டது | காலியிடம் (விழுக்காடு) |
| 1,553 | 1,025 | 528 (*34*) | 7,433 | 5,392 | 2,041 (*27*) |

(ஆதாரம்: CSEன் பதிவுகள்)

தெரிவு செய்யப்பட்ட 108 அரசுப் பள்ளிகளில், 152 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் தேவை என்ற நிலையில், 106 பணியிடங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட 40 பள்ளிகளில், 31 உதவியாளர்/ JA பணியிடங்கள் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. அதே நேரத்தில், 500க்கும் குறைவான மாணவர் சேர்க்கை உள்ள 68 பள்ளிகளில், 41 உதவியாளர்/ JAக்கள் பணியிடங்கள் குறைவாகவும் தேவையான 40 RCக்களில், நான்கு மட்டுமே நிரப்பப்பட்டு மீதமுள்ள 36 பணியிடங்கள் காலியாகவும் உள்ளன.

RTE சட்டம், 2009 விதி 27ன் படி, பத்தாண்டு காலகட்டத்திற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரணப் பணிகள் அல்லது தேர்தல் தொடர்பான பணிகள் தவிர, கல்வி சாரா நோக்கங்களுக்காக ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட மாட்டார்கள். எனவே, காலியிடங்கள் மற்றும் பகுத்தறிந்து ஒதுக்கப்படாத பணியிடங்கள் ஆகிய காரணங்களினால் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் இல்லாத நிலையில், எழுத்தர் பணிகளையும் நிர்வகிக்க வேண்டிய கட்டாயத்தினால் ஆசிரியர்களுக்கு அதிக சுமை ஏற்படுவதை தணிக்கை கண்டறிந்தது.

### *(iii) இரவு காவலாளி பற்றாக்குறை*

பள்ளி மற்றும் வளாகத்தை பாதுகாப்பாக பராமரிக்க இரவு காவலர்கள் அவசியம். ஆனால், அனைத்து பள்ளிகளுக்கும் இரவு காவலர் பணியிடம் அனுமதிக்கப்படவில்லை. மார்ச் 2021 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட, 3,266 இரவு காவலர் பணியிடங்களில் 1,157 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன (35.43 விழுக்காடு).

நவம்பர் 2016ல், ஒரு பொது நல வழக்கின் அடிப்படையில், ஒரு நீதிமன்றம் வழக்கறிஞர் ஆணையர்களை நியமித்தது. அவர்கள் மூன்று மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று, இரவு நேர காவலாளிகள் இல்லாததால், பள்ளி வளாகங்களை சமூக விரோதிகள் இரவு நேரத்தில் சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்துவதாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் (மதுரை கிளை) சமர்ப்பித்தனர். வழக்கறிஞர் ஆணையர்களால் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினைகளை பரிசீலித்த மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை (மதுரை கிளை) ஒவ்வொரு GHS/GHSS க்கும் குறைந்தது ஒரு காவலாளியாவது வழங்கப்படுவதை உறுதிசெய்யுமாறு அரசுக்கு உத்தரவிட்டது (நவம்பர் 2016). அனைத்துப் பள்ளிகளுக்கும் இரவுக் காவலரை வழங்குவதாக GoTN உறுதியளித்த போதிலும், இந்தப் பிரச்சினையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஏப்ரல் 2019ல், துப்புரவுத் தொழிலாளி, காவலாளி மற்றும் தோட்டக்காரர் போன்ற அனைத்து, நிலை- IV வகைப் பணிகளும் படிப்படியாக ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பளிக்கப்படும் என்று GoTN முடிவு செய்தது. இருப்பினும், மார்ச் 2022 நிலவரப்படி, 1,997 GHS (72 விழுக்காடு) மற்றும் 508 GHSS (18 விழுக்காடு) இரவுக் காவலர் பதவியை அனுமதிக்கவில்லை.

மாதிரி GHS/GHSS 108ல், 65 பள்ளிகளில் மட்டுமே இரவு காவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்டது. 65 பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட 71 பணியிடங்களில் 37 பள்ளிகளில் 42 பணியிடங்கள் நிரப்பப்பட்டு மீதமுள்ள 28 பள்ளிகளில் 29 பணியிடங்கள் காலியாக உள்ளன.

கண்காணிப்பு மற்றும் வார்டு சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது (ஆகஸ்ட் 2022). ஆயினும், ஏப்ரல் 2019ல் ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப எடுக்கப்பட்ட முடிவானது, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையும், அதிக எண்ணிக்கையிலான பள்ளிகள் தொடர்ந்து பாதுகாப்பான சூழலைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

## 4.3 பள்ளி உள்கட்டமைப்பு

வழங்கப்படும் கல்வியின் தரத்தில், உள்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. RTE சட்டத்தின் அட்டவணையானது, ஒரு பள்ளிக்கான விதிமுறைகளையும் தரங்களையும் வகுத்ததில் உறுதியான கட்டிடங்களுக்கன பின்வரும் உள்கட்டமைப்பு வசதிகளை குறிப்பிடுகின்றன.




கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளதா என தணிக்கை ஆய்வு செய்தது.

### 4.3.1 உள்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் பராமரிப்புக்கான நிதி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) கடனுதவியுடன் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் மற்றும் தற்போதுள்ள பள்ளிகளுக்கு பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்கு GoTN மூலதன தலைப்புகளின் கீழ் நிதி வழங்குகிறது. மேலும், GoTN பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு வருவாய்த் தலைப்புகளின் கீழ் நிதி வழங்குகிறது. CSE தொடர்பான, மூலதனம் மற்றும் வருவாய்த் தலைப்புகளின் கீழ், நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம் விவரங்கள் **அட்டவணை** 4.6ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.6: CSE நிதி மற்றும் செலவினம்

(₹ கோடியில்)

| ஆண்டு | மூலதன செலவினம் | | பராமரிப்பு | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் |
| 2016-17 | 335.24 | 270.18 | 37.00 | 37.06 |
| 2017-18 | 351.68 | 304.96 | 37.99 | 37.99 |
| 2018-19 | 333.36 | 249.84 | 38.00 | 39.23 |
| 2019-20 | 381.31 | 214.73 | 37.55 | 37.59 |
| 2020-21 | 327.23 | 182.77 | 98.15 | 98.27 |
| மொத்தம் | **1,728.82** | **1,222.48** | **248.69** | **250.13** |

(ஆதாரம்: GoTNன் நிதிக் கணக்கு)

நபார்டு வங்கியின் உதவியுடன் 'பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் இதர உள்கட்டமைப்புகளை நிர்மாணித்தல்' என்ற மூலதனத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய நிலையானதாக இருந்ததும், உண்மையான செலவினம் 2017-18ல் ₹ 304.96 கோடியிலிருந்து 2020-21ல் ₹ 182.77 கோடியாக 40 விழுக்காடு குறைந்துள்ளதும் கண்டறியப்பட்டது.

டெண்டரை இறுதி செய்வதில் இருந்த தாமதத்தினாலும் மற்றும் கட்டுமானத்திற்கான இடம் கிடைக்காததாலும் ஒதுக்கப்பட்ட நிதி குறைவாக பயன்படுத்தப்பட்டது.

2016-21ஆம் ஆண்டில் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு நபார்டு வங்கியின் நிதி ஒதுக்கீடு கணிசமாக அதிகரித்துள்ளது என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. விவசாயம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகள், நபார்டு நிதியுதவி திட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்திருந்தாலும், பள்ளிக் கல்வியில் நபார்டு நிதியுதவி திட்டங்கள் இந்த காலகட்டத்தில் குறைந்துள்ளன **(விளக்கப்படம் 4.2)**.

**விளக்கப்படம் 4.2: NABARD திட்டத்தின் கீழ் துறைவாரியான ஒதுக்கீடு (₹ கோடியில்)**




(ஆதாரம்: GoTNன் நிதிக் கணக்குகள்)

பள்ளிக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட குறைவால் பள்ளிகளுக்கு, குறிப்பாக புதிதாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குப் போதுமான கட்டிடங்கள் வழங்கப்படாமல் போனதை தணிக்கை கண்டறிந்தது **(பத்தி 4.3.2)**.

2022-23ம் ஆண்டின் மூலதனத் தலைப்புளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்படி முன்மொழியப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (மே 2022).

### 4.3.2 நிலையான கட்டிடம் மற்றும் போதுமான வகுப்பறைகள் இல்லாதமை

மார்ச் 2021 நிலவரப்படி, தமிழ்நாட்டில் உள்ள 5,572 GHS மற்றும் GHSS களில் மொத்தம் 66,169 நிரந்தர வகுப்பறைகள் (pucca[2] class rooms) மற்றும் 20,732 பகுதியளவு கட்டட (partially pucca[3]) மற்றும் கூரை (kutcha) வகுப்பு அறைகள் உள்ளன. SS விதிமுறைகளின்படி, 40 மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு வகுப்பறை தேவை.

[2] நிரந்தர வகுப்பறை என்பது கட்டட சுவர்கள், கான்கிரீட் கூரை மற்றும் முறையான தளம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

[3] பகுதியளவு கட்டட வகுப்பறை என்பது கான்கிரீட் கூரை இல்லாமல் கட்டட சுவர்கள் மற்றும் தரைகள் மட்டும் கொண்ட அறைகளைக் குறிக்கிறது,

108 மாதிரிப் பள்ளிகளில், 48 பள்ளிகளில் (44 விழுக்காடு) மொத்தம் 227 வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருந்தது. இந்த 48 பள்ளிகளில் (**இணைப்பு 4.1**) பற்றாக்குறை 1 முதல் 30 வரையாக வேறுபட்டிருந்தது.மாதிரிப் பள்ளிகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், மாநில அளவில் வகுப்பறைகளின் பற்றாக்குறை தோராயமாக 11,711[4] ஆக இருக்கலாம் என்று தணிக்கை மதிப்பிட்டுள்ளது.

வகுப்பறைகள் இல்லாததால், **விளக்கப்படங்கள் 4.3 முதல் 4.6** வரை காட்டப்பட்டுள்ளபடி திறந்தவெளியில், மரங்களின் நிழலில், ஆய்வக கட்டிடங்களில், பாழடைந்த கட்டமைப்புகளில் அல்லது தற்காலிக வகுப்பறைகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன.

**விளக்கப்படம் 4.3: மரத்தின் கீழ் வகுப்புகள் நடைபெறுதல் GBHSS, வேட்டவலம், திருவண்ணாமலை**



**விளக்கப்படம் 4.4: ஆய்வகத்தில் வகுப்புகள் நடைபெறுதல் GHSS, இம்மிடிநாயக்கன்பள்ளி, கிருஷ்ணகிரி**



**விளக்கப்படம் 4.5: கடலூர் சிறுகிராமம் GHSSல் பாழடைந்த கட்டிடத்தில் வகுப்புகள் நடைபெறுதல்**



**விளக்கப்படம் 4.6: வெங்கலக்குறிச்சி, இராமநாதபுரம் GHS ல் தற்காலிக அமைப்பில் வகுப்புகள் நடைபெறுதல்**




(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

மாதிரி பள்ளிகளில் பின்வருவன கண்டறியப்பட்டது:

- பெரம்பலூர் மாவட்டத்தில், பெரியம்மாபாளையத்தில், 2017-18ல் மேம்படுத்தப்பட்ட GHSக்கு, சொந்தமாக நிரந்தர கட்டடம் இல்லை. உயர்நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கு தொடக்கப் பள்ளியின் சில வகுப்பறைகளும், பயன்பாட்டில் இல்லாத அங்கன்வாடி மையமும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்டத்தில், வெங்கலக்குறிச்சியில் உள்ள GHS, 2018-19ஆம் ஆண்டில், நடுநிலைப் பள்ளியிலிருந்து GHS ஆக தரம் உயர்த்தப்பட்டது. ஆனால், கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவில்லை. சரியான வகுப்பறைகள் இல்லாததால் மரத்தடியிலும், தகரக் கூரைக் கொட்டகையிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன.

[4] $227 \div 108 \times 5{,}572 = 11{,}711$.

- திருவண்ணாமலை மாவட்டம் தாளையம்பள்ளத்தில் உள்ள, 2017-18ல் தரம் உயர்த்தப்பட்ட GHSல், தொடக்கப்பள்ளி மற்றும் கூட்டுறவு பால் சங்க (cooperative milk society) கட்டடங்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- சேலம் மாவட்டம் பாவடியிலுள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது, ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இரண்டு வெவ்வேறு வளாகங்களில் (ஒரு வளாகத்தில் 6 முதல் 10 வகுப்புகள் மற்றும் மற்றொரு வளாகத்தில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகள்) இயங்கி வருகிறது.

இந்த முக்கிய உள்கட்டமைப்பின் பற்றாக்குறைக்கான காரணங்களை தணிக்கை ஆய்வு செய்து கண்டறிந்தது:

**பத்தி 4.3.1ல்** விவரிக்கப்பட்டபடி, பள்ளிக் கல்விக்கான மூலதன ஒதுக்கீடு 2017-21ல் நிலையான அளவிலேயே இருந்தது. 2016-21 வரையிலான ஆண்டுகளில், நபார்டு திட்டம் மற்றும் SSன் கீழ் அனுமதிக்கப்பட்டு கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளின் விவரங்கள் **அட்டவணை 4.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை4.7: 2016-21ல் புதிய வகுப்பறைகள் கட்டுமானம்**

| ஆண்டு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | NABARD | SS | மொத்தம் | |
| 2016-17 | 2,001 | 96 | 2,097 | அனுமதிக்கப்பட்ட அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன |
| 2017-18 | 298 | 137 | 435 | |
| 2018-19 | 1,024 | 0 | 1,024 | |
| 2019-20 | 885 | 106 | 991 | ஜூன் 2021 வரை பணிகள் நடந்து கொண்டிருந்தன |
| 2020-21 | 968 | 71 | 1,039 | |
| அனுமதிக்கப்பட்ட மொத்தம் புதிய வகுப்பறைகள் | | | 5,586 | |

(ஆதாரம்: CSE மற்றும் SSன் பதிவுகள்)

2016-21ஆம் ஆண்டில் வகுப்பறைகள் கட்டுவதற்கான நிதியளிப்பில் முன்னுரிமை இல்லாதது மட்டுமன்றி (**பத்தி 4.3.1**), நிலம் கிடைப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் தாமதம் போன்ற காரணங்களால் கட்டுமானப் பணிகள் மெதுவாக நடப்பதால், போதுமான அளவு எண்ணிக்கையிலான புதிய வகுப்பறைகளை சேர்ப்பதில் இடையூறு ஏற்பட்டது என்பதை தணிக்கை கண்டறிந்தது. மேற்கூறியவற்றிலிருந்து, புதிய வகுப்பறைகள் கட்டும் தற்போதைய வேகத்தில் செயல்பட்டால், தற்போதைய தேவையான 11,711 புதிய வகுப்பறைகள் அடுத்த 10 ஆண்டுகளில் கூட கட்டிமுடிக்கப்படாது என்பது தெரியவருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கட்டப்படும் வகுப்பறைகளின் எண்ணிக்கை தேவைக்கு ஏற்றதாக இல்லை என தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் அதிக எண்ணிக்கையிலான வகுப்பறைகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவதால், **விளக்கப்படம் 4.7ல்** சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, 2018-21ஆம் ஆண்டில் நிரந்தர கட்டட வகுப்பறைகளின் மொத்த எண்ணிக்கை குறைந்தது.

விளக்கப்படம் 4.7: அரசு பள்ளிகளில் வகுப்பறைகளின் எண்ணிக்கை




(ஆதாரம்: UDISE தரவு)

**பத்தி 3.2ல்** விவரிக்கப்பட்டபடி, GoTN, பள்ளிகள் தரம் உயர்த்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் மேம்படுத்தி வருகிறது. ஆயினும், வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற, தேவையான கூடுதல் உள்கட்டமைப்புகளை வழங்குவதற்கான தெளிவான திட்டம் ஏதுமின்றி மேம்படுத்தப்படுவது கண்டறியப்பட்டது. CSE மற்றும் SPDல் உள்ள பதிவேடுகளை ஆய்வு செய்ததில், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் (281 GHSகள் மற்றும் 247 GHSSகள்) பள்ளி உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்ட நிலை, **விளக்கப்படம் 4.8ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி பின்தங்கியிருந்தது தெரியவந்தது.

விளக்கப்படம் 4.8: பள்ளியின் உள்கட்டமைப்பை மேம்படுத்தலின் நிலை







(ஆதாரம்: CSE/SSல் இருந்து பெறப்பட்ட தரவு)

197 GHSகள் மற்றும் 167 GHSSகளில் உள்ள வகுப்பறை, ஆய்வகங்கள் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த நிதி வழங்கப்படாததால் அப்பணி மேற்கொள்ளப்படவில்லை. ஒன்பது மாதிரி மாவட்டங்களில், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் பின்வரும் **அட்டவணை 4.8ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.8: 2017-21ல் மாதிரி மாவட்டங்களில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட மராமத்து பணிகளின் விவரங்கள்

| மேம்படுத்தல் | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை | மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படாத பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக | 79 | 23 | 56 |
| உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக | 69 | 26 | 43 |

(ஆதாரம்: அந்தந்த தலைமை கல்வி அதிகாரிகள் மற்றும் பள்ளிகளின் பதிவுகள்)

இந்தப் பள்ளிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்த நிதி வழங்காமலேயே பள்ளிகளை தரம் உயர்த்துவது, ஒவ்வொரு ஆண்டும் GoTNன் திட்டமிடலில் தொடரும் குறைபாடு என்பதை தணிக்கை கண்டறிந்தது. இதனால், இந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தரமான பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் தவிக்கின்றனர்.

பள்ளிகளில் உள்கட்டமைப்பை உருவாக்குவதை விரைவுபடுத்துவதற்காக ₹ 7,500 கோடி செலவில் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக (2022) அரசு பதிலளித்தது (ஆகஸ்ட் 2022).

### 4.3.3 புதிய பள்ளி கட்டிடங்களின் தரமற்ற கட்டுமானங்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில், எம்.நெடுங்குளத்தில் உள்ள GHSல், கட்டட பணிகள் 2017-18ல் RMSAன் கீழ் மேற்கொள்ளப்பட்டு ₹ 1.60 கோடி செலவில் முடிக்கப்பட்டது (ஜூலை 2018). கூட்டு நேரடி சரிபார்ப்பின் போது, கட்டுமானம் தரமற்றதாக இருப்பதை தணிக்கை கண்டறிந்தது (**விளக்கப்படம் 4.9**). பள்ளியின் HM கட்டிடத்தின் தற்போதைய நிலையை இராமநாதபுரம் CEO யிடம் தெரிவித்தார் (நவம்பர் 2021) அவர் இதனை இராமநாதபுரத்தில் உள்ள செயற்பொறியாளருக்கு தெரிவித்தார். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் பாதுகாப்பற்ற சூழலில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

விளக்கப்படம் 4.9:புதிய பள்ளி கட்டிடங்களின் தரமற்ற கட்டுமானம் - இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எம்.நெடுங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியின் புகைப்படங்கள்



(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

மாவட்ட அளவில், பொதுப்பணித் துறையின் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக, RMSA/SSன் மாவட்டத் திட்ட அலுவலகத்தில் ஒரு பொறியியல் பணியாளர் இருப்பதை தணிக்கை கண்டறிந்தது. ஆயினும், பள்ளிகளின் HMகள் அல்லது DEO/CEO, கட்டுமான கட்டத்தில் கட்டுமானத்தின் தரம் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பிறகு தரக்குறைவு பற்றி தெரிவிப்பதும், பொதுப்பணித்துறையின் மீது முழுப் பழியையும் சுமத்துவதும் கட்டுமானத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க உதவவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. CEO, இதற்கான தீர்வுக்காக, உயர் அதிகாரிகளிடம் இதைத் தெரிவிக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

### 4.3.4 பள்ளிகளில் விளையாட்டு மைதான வசதி

பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளில் ஒன்று, விளையாட்டு மைதானத்திற்கென பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலம் இருக்க வேண்டும் என்பதாகும். மார்ச் 2022 நிலவரப்படி, தமிழ்நாட்டில் உள்ள மொத்த 5,572 GHS/GHSSல், 898 (16 விழுக்காடு) பள்ளிகளில், விளையாட்டு மைதான வசதி இல்லை மற்றும் 780 பள்ளிகளில் குழந்தைகள் வெளிப்புற விளையாட்டுகளை விளையாட மாற்று ஏற்பாடுகள் இல்லை.

மாதிரி 108 GHS/GHSSல், 29 பள்ளிகளில் (27 விழுக்காடு) விளையாட்டு மைதான வசதி இல்லை. 79 மாதிரியான GHS/GHSSல் PET இல்லாமல் விளையாட்டு மைதானங்கள் இருந்தபோதிலும், விளையாட்டு மைதானங்கள் இல்லாத 29 பள்ளிகளில், எட்டு[5] பள்ளிகளில் PET பணியிடம் இருந்தது கண்டறியப்பட்டது.

விளையாட்டு மைதானங்கள் இல்லாமை, PET பணியிடங்களின் அடிப்படைக் கோட்பாடற்ற ஒதுக்கீடு ஆகியவை குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்தாததற்கு காரணமாகும்.

## 4.4 பிற அடிப்படை வசதிகள்

மாதிரி 108 GHSகள் மற்றும் GHSSகளில், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற பிற அடிப்படை வசதிகள் உள்ளனவா என தணிக்கை ஆய்வு செய்தது.

அனைத்து 108 GHS/GHSSகளிலும் குடிநீர் வசதி இருப்பது தெரிந்தது.

IS 8827-1978ன் பிரிவு 16.2 மற்றும் அட்டவணை 9ன் படி (2006ல் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது), HS மற்றும் HSSல் ஒவ்வொரு 40 சிறுவர்கள்/சிறுமிகளுக்கு ஒரு கழிப்பறை மற்றும் ஒவ்வொரு 20 சிறுவர்கள்/ சிறுமிகளுக்கு ஒரு சிறுநீர் கழிப்பிடமும் இருக்க வேண்டும். இதுபோன்ற வசதிகள் சிறுவர், சிறுமியருக்கு தனித்தனியாக வழங்கப்பட வேண்டும்.

பயன்படுத்திய நாப்கின்களை அகற்றுவதற்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மின்சார எரியூட்டிகளை வழங்க அரசு முடிவு செய்தது (2018-19). CwSN நலனுக்காக அனைத்து கல்வி நிறுவனங்களிலும் சிறப்பு கழிவறைகள் கட்டப்பட வேண்டும்.

2020-21க்கான UDISE போர்ட்டலில் உள்ள தரவுகளின்படி:

---

5 (i) GHS, பாரதியார்நகர், (ii) GHSS ஆண்கள், சூளகிரி, (iii) GHSS பெண்கள், ஒசூர், (iv) RVHSS பாய்ஸ் ஒசூர், (v) GHS, வரக்கல்பட்டு, (vi) GHSS ராமாபுரம் மேற்கு, கரூர், (vii) GGHS, அரவக்குறிச்சி மற்றும் (viii) MPL குமரன் HS, கரூர்.

- 1,966 பள்ளிகளில் CwSNக்கு கழிப்பறை இல்லை.
- 5,121 பள்ளிகளில் 135 பள்ளிகளில் சிறுவர்களுக்கான கழிப்பறை இல்லை அல்லது பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தன.
- 5,277 பள்ளிகளில் 20 பள்ளிகளில் பெண்களுக்கான கழிப்பறைகள் இல்லை அல்லது பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தன.
- 1,740 பள்ளிகளில் எரியூட்டிகள் இல்லை அல்லது எரியூட்டிகள் செயல்படவில்லை.

மாதிரிப் பள்ளிகள் 108ல், தணிக்கை கண்டறிந்தது:

- 78 பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் (72 விழுக்காடு), IS 8827-1978 நெறிமுறையுடன் ஒப்பிடும் போது, போதுமானதாக இல்லை, அதேசமயம் UDISE தரவுகள் மேற்கூறிய 78 பள்ளிகளில் 14 பள்ளிகளில் மட்டுமே பற்றாக்குறையைக் குறிப்பிடுகின்றன.
- 84 மாதிரி இணைக் கல்விப் பள்ளிகளில் நான்கில்[6] (5 விழுக்காடு) பெண்களுக்கான கழிவறை வசதிகள் மட்டுமே உள்ளன.
- கோவை மாவட்டம் நெகமத்திலுள்ள GGHS மற்றும் கரூர் மாவட்டம் கோவிலூரிலுள்ள GHS ஆகிய இரண்டு பள்ளிகளில், மாணவர்கள் கழிப்பறைக்கு செல்ல போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையை கடக்க வேண்டியிருந்தது.
- 34 பள்ளிகளில் எரியூட்டி கருவிகள் இல்லை அல்லது வேலை செய்யவில்லை. மேலும், நான்கு பள்ளிகளில் எரியூட்டிகள் நிறுவப்படவில்லை. எரியூட்டிகளை சரிசெய்ய/ நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கை பதிவில் இல்லை. ஆயினும், மேலே குறிப்பிட்டுள்ள 34 பள்ளிகளில் 17ல், எரியூட்டிகள் செயல்படுவதாக UDISE தரவு குறிப்பிடுகிறது.
- மாநில அளவிலான தரவுகள் மற்றும் தணிக்கை மூலம் நடத்தப்பட்ட நேரடி சரிபார்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில், **பத்தி 4.3.1** மற்றும் **பத்தி 4.3.2**ல் ஏற்கனவே கூறப்பட்ட நிதி சிக்கல்கள் காரணமாக கழிப்பறை வசதிகள் திருப்திகரமாக இல்லை என்பது கண்டறியப்பட்டது.
- அரசு பள்ளிகளில் ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் பராமரிக்கும் பொறுப்பு பள்ளிக் கல்வித்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆயினும், கணிசமான எண்ணிக்கையிலான பள்ளிகளில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லாததால், தேவையுடன் நிதியை இணைப்பதில் உள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

---

6 (i) GHSS, நடுவீரப்பட்டு, கடலூர், (ii) GHS, காட்டுகூடலூர், கடலூர், (iii) GHS, வெங்கலக்குறிச்சி, இராமநாதபுரம் மற்றும் (iv) GHS, தாளையம்பள்ளம், திருவண்ணாமலை.

## 4.5 பள்ளிக் கழிவறைகளை பராமரித்தல்

நவம்பர் 2015ல், GoTN அனைத்து அரசு மற்றும் உள்ளாட்சி பள்ளிகளில் கழிப்பறைகளை பராமரிக்கும் பொறுப்பை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்தது. திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் கழிப்பறைகளை பராமரிக்க நிதி வழங்கப்படுகிறது. அதன் விவரங்கள் **அட்டவணை 4.9ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.9: கழிப்பறைகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை**

| ஆண்டு | GoTN ஆல் வழங்கப்பட்ட தொகை (₹ கோடியில்) |
|---|---|
| 2015-16 | 202.88 |
| 2016-17 | |
| 2017-18 | |
| 2018-19 | |
| 2019-20 | 64.26 |

(ஆதாரம்: CSEன் பதிவுருக்கள்)

2020-21ல் சுகாதாரத்திற்காக GoTN நிதி அளிக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

2015-20ல் பள்ளிகளில் கழிவறைகளை பராமரிப்பதற்காக பிரத்யேகமாக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், மாதிரி பள்ளிகளின் கழிவறைகள் பொதுவாக சுகாதாரமற்ற / பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. சில மாதிரிப் பள்ளிகளில் கழிப்பறைகளின் நிலை **விளக்கப்படம் 4.10ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.10: கழிப்பறைகளின் தரமற்ற நிலை**

**RV ஆண்கள் HSS, ஒசூர், கிருஷ்ணகிரி**



**RK அரசு HSS, கடம்புலியூர், கடலூர்**



(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

பள்ளிகளின் HMகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் துப்புரவு அலுவலர்கள்/அதிகாரிகள் இடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்கென, GoTN எந்த முறையான கட்டமைப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. SSன் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியை பராமரிப்புக்காக பயன்படுத்துவதற்கு பொதுப்பணித்துறையை அணுகுவதில் HMகள் முனைப்பு காட்டவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. மேலும், 2020-21ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்குவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறு, உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு இல்லாததாலும், சுகாதாரத்துறை அதிகாரிகள் பராமரிப்பு நடவடிக்கை எடுக்காததாலும் அரசு பள்ளிகளில் கழிப்பறைகள் சுகாதாரமற்ற நிலையில் உள்ளன.

பள்ளிகளில் சுகாதார சேவைகள் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யப்படுவதாக அரசு பதிலளித்தது (மே 2022). பள்ளிகளில் சுகாதாரமான சூழ்நிலையை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு சுகாதாரம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை கற்பிப்பதற்கும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை என்று தணிக்கை கண்டறிந்தது.

## 4.6 பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள்

பள்ளியின் சொத்துக்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சுற்றுச் சுவர்கள் அவசியம். மாதிரி GHS/GHSS 108ல், 38 பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர்கள் இல்லை அல்லது முழுமையற்ற அல்லது சேதமடைந்த சுவர்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

மாதிரிப் பள்ளிகளில், கடலூர் மாவட்டத்தில் உள்ள GHS, பச்சையாங்குப்பம் மற்றும் GHS., காட்டுக்கூடலூர் ஆகிய பள்ளிகளில், சுற்றுச் சுவர்கள் இல்லாததால், பள்ளி நிலம் எவ்வளவு என்ற விவரம் கூட பள்ளி அதிகாரிகளிடம் இல்லை. குறிக்கப்பட்ட சுற்றுச் சுவர் இல்லாததால், கிருஷ்ணகிரி, ஆண்டிவாடி, ஒசூர், GHS பள்ளி வளாகத்தில் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனால், பள்ளிகளின் சொத்துக்களும், மாணவர்களின் பாதுகாப்பும் பாதிக்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது.

## 4.7 பள்ளிகளில் ஆய்வக வசதிகள்

அறிவியல் குழுப் படிப்புகளை வழங்கும் ஒவ்வொரு GHSSயிலும், பாட வாரியாக ஆய்வகங்கள் இருக்க வேண்டும். இது சாத்தியமற்றதாகக் கருதப்படும் இடங்களிலும், மாணவர்களின் நடைமுறை கற்றல் அனுபவத்தைப் (practical learning experience) பூர்த்தி செய்ய, ஒருங்கிணைக்கப்பட்ட அறிவியல் ஆய்வகம் (Integrated Science Lab) மிகவும் அவசியம். சோதனை செய்யப்பட்ட GHSகளில், 18ல் ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வகம் இல்லை.

மாதிரி GHSS 68ல், 14 பள்ளிகளில் (21 விழுக்காடு) இயற்பியல் ஆய்வகங்கள் இல்லை, 15 பள்ளிகளில் (21 விழுக்காடு) வேதியியல் ஆய்வகம் இல்லை. 10ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான குறைவான வசதிகள் கோண்ட ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வகத்தில்தான் இந்த மாணவர்கள் பயிற்சி செய்ய வேண்டியிருந்தது. இதில், கடலூரில் உள்ள GGHSS பள்ளிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவியல் ஆய்வகம் கூட இல்லை.

எனவே, GHHSகளில் படிக்கும் மாணவர்களில், 20 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் நடைமுறை வகுப்புகள் மூலம் அறிவியல் பாடங்களைக் கற்க போதுமானஅளவு வசதிகள் அளிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 4.8 இணைய வசதியுடன் கூடிய கணினி அறை/உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வுக்கூடம்

பள்ளிகளில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (Information and Communication Technology - ICT in School) திட்டம் 2006-07ல் GHS/GHSSல் தொடங்கப்பட்டது. இது மாணவர்களின் ICT திறன்களை வளர்த்துக் கொள்ளவும், கணினி உதவியுடன் கல்வி கற்கவும் வாய்ப்புகளை வழங்குகிறது. தமிழ்நாட்டில்

ICT திட்டத்தின் கீழ், 3,090 GHSல் தலா 10 கணினிகளும், 2,939 GHSSல் 20 கணினிகளும் கொண்ட 6,029 உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படுவதாக இருந்தது. கூடுதலாக, பள்ளிகளுக்கு வீழ்த்தி (projector), பலசெயல்பாடுடைய அச்சுப்பொறி (multi functional printer) வலை நிழம்பி (web camera) மற்றும் தொடர்புடைய பிற வன்பொருள் (hardwares) மற்றும் தளபாடங்கள் (furniture) வழங்கப்படும். CSEன் கீழ் உள்ள 5,572 GHS/GHSSல், செப்டம்பர் 2021 நிலவரப்படி, 2,667 GHS (95 விழுக்காடு) மற்றும் 2,748 GHSS (99 விழுக்காடு)ல் 'பள்ளிகளில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்' செயல்படுத்தப்பட்டுள்ளது.

108 மாதிரியான GHS/GHSSகளில் (93 விழுக்காடு), 101ல் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வுக்கூடம் திருப்திகரமாகச் செயல்படுவதை தணிக்கை கண்டறிந்தது. இதில் நல்ல சாதனை அடையப்பட்டுள்ளது.

## 4.9 உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) மற்றும் விடுதிகளின் உள்கட்டமைப்பிலுள்ள குறைபாடுகள்

குறைந்த பள்ளி வசதி உள்ள பகுதிகளில் வசதியை மேம்படுத்துவதற்கு அரசால் (2004 முதல்) பல உத்திகள் பின்பற்றப்பட்டன. அவற்றுள், பெண் குழந்தைகளுக்கான கஸ்தூர்பாய் காந்தி பள்ளிகள் (KGBV) எனப் பெயரிடப்பட்ட பெண்கள் உறைவிடப் பள்ளிகளை நிறுவுவது, பெண்கள் விடுதிகள் ஏற்படுத்துவது ஆகியன முக்கியமானவை. மாதிரி மாவட்டங்களில், மார்ச் 2021 நிலவரப்படி, 14 KGBVகள் மற்றும் 44 பெண்கள் விடுதிகள் CSE கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டன. இரண்டு KGBVகள் (சித்தூர், சேலம் மாவட்டம் மற்றும் பெருங்குளத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்) மற்றும் மூன்று பெண்கள் விடுதிகள் (ஆக்ஸஸ் ரெசிடென்ஷியல், வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம், RMSA விடுதி, ஏற்காடு, சேலம் மாவட்டம் மற்றும் பெண்கள் விடுதி, ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம்) ஆகியவற்றின் உள்கட்டமைப்பு குறைபாடுகளை தணிக்கை மதிப்பீடு செய்தது. அவற்றில் பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- ஐந்து விடுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சேர்க்கை அளவான 500க்கு எதிராக சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 525 ஆகும்.
- ஐந்து மாதிரி உறைவிடப் பள்ளிகள் / விடுதிகளில் இரண்டில்[7], பெண்களுக்கான கழிவறைத் தொகுதிகள் விடுதிக் கட்டிடத்திற்கு வெளியே கட்டப்பட்டுள்ளன, இது வழக்கமில்லாத நேரங்களில் (odd hours) பயன்படுத்தினால் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கலாம்.
- சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் இயந்திரங்கள் மற்றும் அப்புறப்படுத்துவதற்கான எரியூட்டிகள் எந்த விடுதியிலும்/ KGBVயிலும் வேலை செய்யவில்லை. ஐந்து விடுதிகளில் மூன்றில்[8] சூரியசக்தி தகடு செயல்படவில்லை.

எனவே, கல்விக்கான வசதியை மேம்படுத்துவதற்கு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் தேவை பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதையும், தற்போதுள்ள விடுதிகளில் நிதி இருந்தபோதிலும் பராமரிப்புப் சிக்கல்கள் இருப்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

---

7 KGBV, சித்தூர் மற்றும் பெருங்களத்தூர்.

8 ஆக்ஸஸ் ரெசிடென்ஷியல், வால்பாறை, RMSA விடுதி, ஏற்காடு மற்றும் பெண்கள் விடுதி, பெருங்களத்தூர்.

## 4.10 தளவாடங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களை கொள்முதல் செய்யாமை

2014-16ஆம் ஆண்டில், நபார்ட் கடன் உதவித் திட்டத்தின் கீழ் GHS மற்றும் GHSSல் 4,639 வகுப்பறைகள் மற்றும் 516 அறிவியல் ஆய்வகங்களை GoTN அனுமதித்தது. அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் பல ஆண்டுகளாக கட்டி முடிக்கப்பட்டன. புதிதாக கட்டப்பட்ட வகுப்பறைகளுக்கான தளவாடங்கள் மற்றும் ஆய்வகங்களுக்கான உபகரணங்களை வாங்குவதற்கு நபார்டு உதவியுள்ளது, வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களின் கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன் நபார்டுக்கு தனி முன்மொழிவு அனுப்பப்படும்.

கணிசமான தாமதங்களுக்குப் பிறகு, செப்டம்பர் 2018ல், புதிய வகுப்பறைகளுக்கான தளபாடங்கள் மற்றும் புதிதாக கட்டப்பட்ட ஆய்வகங்களுக்கான உபகரணங்களை வாங்குவதற்கு நிர்வாக அனுமதி கோரி GoTNக்கு CSE முன்மொழிவுகளை சமர்ப்பித்தது. GoTN, கோரிக்கையின் மீது உடனடியாக முடிவெடுக்கவில்லை, மேலும் ஏப்ரல் 2019ல், நபார்டுல் இருந்து ஒப்புதல் பெறவும், தளபாடங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களை வாங்குவதற்கான மேற்கோளைப் பெறவும் CSE-க்கு உத்தரவிட்டது. ₹ 17.84 கோடி மதிப்பில் தளபாடங்கள் மற்றும் ₹ 7.78 கோடி மதிப்பில் ஆய்வக உபகரணங்களை வாங்குவதற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன், நவம்பர் 2019ல் CSE மீண்டும் முன்மொழிவை சமர்ப்பித்தது. புதிய முன்மொழிவையும் GoTN ஏற்கவில்லை. 2019 நவம்பரில் புதிய முன்மொழிவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக நபார்டு வங்கியின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற GoTNன் வழிமுறைகளை CSE பின்பற்றவில்லை என்பதை தணிக்கைக் கண்டறிந்தது. ஜூலை 2020ல், 2019-20 நிதியாண்டு முடிவுற்றதால் முன்மொழிவினை அரசு நிராகரித்தது. மேலும், 2020-21ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட முன்மொழிவு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அக்டோபர் 2020ல் CSE சமர்ப்பித்த முன்மொழிவு 2020-21 நிதியாண்டு முடிவடைவதைக் காரணம் காட்டி மீண்டும் மே 2021ல் நிராகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, இந்த புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் ஏற்கனவே உள்ள பழைய தளவாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் இயங்கின. முன்மொழிவுகள் மீண்டும் திருத்தப்பட்டு, ஜூலை 2021ல் CSE ஆல் ₹ 18.70 கோடி செலவில் தளபாடங்களும் ₹ 11.26 கோடி செலவில் ஆய்வக உபகரணங்களும் வாங்குவதற்கு முன்மொழியப்பட்டது, இது நவம்பர் 2019ல் மதிப்பிடப்பட்ட செலவை விட மொத்தமாக ₹ 4.34 கோடி அதிகரித்துள்ளது.

இவ்வாறு, வழக்கமான கொள்முதலை முறையாக சரிவர மேற்கொள்ளாததால், மூன்று முதல் ஏழு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள், போதுமான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாமல் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், கால தாமதம் காரணமாக, 2019 நவம்பரில் மதிப்பிடப்பட்ட செலவை விட, அதே அளவு தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கு, GoTNக்கு கூடுதலாக ₹ 4.34 கோடி செலவினம் ஏற்பட உள்ளது.

தணிக்கை கண்டுபிடிப்புகளை அரசு (மே 2022) ஏற்றுக்கொண்டது. தேவையான நிர்வாக அனுமதிகள் அரசிடமிருந்து எதிர்நோக்கப்படுவதாக பதிலளித்தது.

## 4.11 பள்ளிகளில் பேரிடர் தயார்நிலை

தனியார் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், அங்கீகாரத்தைப் புதுப்பிக்கும் போது அல்லது புதிய அங்கீகாரத்திற்காக, கட்டிட நிலைப்பு சான்றிதழ் மற்றும் தீ பாதுகாப்புச் சான்றிதழை CSE வலியுறுத்துகிறது. ஆனால், அரசுப் பள்ளிகளுக்கு அத்தகைய அமைப்பு இல்லை.

பிப்ரவரி 2019ல், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (National Disaster Management Authority - NDMA) 'பள்ளி பாதுகாப்புக் கொள்கையை' வெளியிட்டது. அந்த கொள்கையின்படி, அனைத்து பள்ளிகளும் தங்கள் வளாகத்தின் வருடாந்திர கட்டமைப்பு தணிக்கை மற்றும் கட்டமைப்பு அல்லாத தணிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

5,572 GHS/GHSSன் UDISE 2020-21 தரவுகளின் பகுப்பாய்வில், 3,036 பள்ளிகளில் கட்டமைப்பு தணிக்கை (54 விழுக்காடு), 2,055 பள்ளிகளில் கட்டமைப்பு அல்லாத தணிக்கை (37 விழுக்காடு) மற்றும் 4,934 பள்ளிகளில் (89 விழுக்காடு) தீயணைக்கும் கருவிகள் நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டது கண்டறியப்பட்டது. ஆயினும், மாதிரிப் பள்ளிகள் 108ல் உள்ள உண்மை நிலவரத்தின் சரிபார்ப்பு, ஆண்டு கட்டமைப்பு தணிக்கை மற்றும் கட்டமைப்பு அல்லாத தணிக்கை குறித்து பள்ளி அதிகாரிகள் அறியவில்லை என்பதையும், இந்த தணிக்கைகளை நடத்துவதற்கு நிதி எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தியது.

மேலும் பல பள்ளிகளில் பழைய மற்றும் பாழடைந்த கட்டிடங்கள் இருப்பது பள்ளிக்கட்டடங்களின் JPVன் போது கண்டறியப்பட்டது. அடையாளம் காணப்பட்ட அத்தகைய கட்டிடங்கள் பயன்பாட்டில் இல்லை என்றாலும், மாணவர் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருந்த போதிலும், அவை இடிக்கப்படவில்லை **(விளக்கப்படம் 4.11)**.

**விளக்கப்படம் 4.11:** பாழடைந்த கட்டிடங்கள் இடிக்கப்படவில்லை





GHS, அம்மாபாளையம், பெரம்பலூர் மாவட்டம்




GHSS, மத்திகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்



GHS, சேலம் மாவட்டம்

(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

எனவே, பள்ளிகளில் பேரிடர் அபாயத்தைக் குறைக்க பள்ளி அதிகாரிகளும், CSEயும் பயனுள்ள தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. வகுப்பறைகளில் 24 விழுக்காடு கூரைக் கட்டிடங்களில் இருப்பதால், பேரிடர் அபாயங்களை உள்ளது மற்றும் பேரிடர் தயார்நிலையில் இருத்தல் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.
1,669 கட்டிடங்கள் சேதமடைந்ததாகக் கண்டறியப்பட்டு, குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக பட்ஜெட்டில் (2022-23) ₹ 100 கோடி ஒதுக்கப்பட்டதாக அரசு (ஆகஸ்ட் 2022) தெரிவித்தது.

## 4.12 முடிவுரை

தேசியக் கல்விக் கொள்கைகள் கல்விக்கான பொதுச் செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஆறு விழுக்காடு அளவிற்கு உயர்த்துவதை முன்மொழிந்தது. ஆனால், GoTN ஆனது மாநில உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீட்டில் போதுமான முன்னுரிமை வழங்காததால், உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான மாநிலத்தின் செலவினம் 2016-17ல் GSDPயில் 0.94 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2020-21ல் GSDPயில் 0.85 விழுக்காடாகக் குறைந்துள்ளது. பணியிடங்கள் நிரப்புவதில் தாமதம், அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் பற்றாக்குறை மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுள் காலியிடங்கள் ஆகிய காரணங்களினால் அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. தேவையுடன் ஒப்பிடும் போது மொத்த பற்றாக்குறை 31,490 என மதிப்பிடப்பட்டது, இது தேவையில் 29 விழுக்காடாகும். ஆய்வக உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் போன்ற ஆசிரியர் அல்லாதவர்களின் பற்றாக்குறையினால், ஆசிரியர் அல்லாத ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஆசிரியர்களே செய்ய வேண்டியிருந்தது. இது கற்பித்தல் தரத்தை பாதிக்கும்.

மாதிரிப் பள்ளிகள் 108ல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், மாநில அளவில் வகுப்பறைகளின் பற்றாக்குறை தோராயமாக 11,711 ஆக இருக்கும் என்று தணிக்கை மதிப்பிட்டுள்ளது. புதிய வகுப்பறைகள் கட்டும் தற்போதைய வேகத்தில், இந்த பற்றாக்குறை அடுத்த 10 ஆண்டுகளில் கூட தீர்க்கப்படாது. வகுப்பறைகள் பற்றாக்குறையால் வகுப்புகள் திறந்தவெளியில், மரங்களின் நிழலில், ஆய்வக கட்டிடங்களில், பாழடைந்த கட்டிடங்களில் அல்லது தற்காலிக வகுப்பறைகளில் நடத்தப்பட்டன. தரம் குறைந்த கட்டடங்கள், பராமரிப்பின்மை, போதிய கழிப்பறை வசதிகள் இல்லாதது, கட்டட பாதுகாப்பை உறுதி செய்யாததால் ஏற்படும் பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் அரசு பள்ளிகளில் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு சாரா பாதுகாப்பு தணிக்கை நடத்தாதது, கட்டட பாதுகாப்பு மற்றும் தீ பாதுகாப்பு சான்றிதழ்கள் பெறாமை ஆகியவை பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரச்சினைகள் தீர்வு காணா நிலையில் இருத்தலுக்கு காரணமாகும்.

## 4.13 பரிந்துரைகள்

தணிக்கை பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறது:

- பள்ளிக் கல்விக்கான போதிய செலவீனத்தை அரசு உறுதிசெய்து, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வகுப்பறைகள் கட்டுவதற்கும், தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கும் முன்னுரிமை அளிக்கலாம்.

- ஆசிரியர் பணியிடங்களின் தேவையை மாற்றங்களுக்கேற்ப மதிப்பிடுவதன் மூலம் ஆசிரியர் தேர்வு செயல்முறை நெறிப்படுத்தப்படுவதை அரசு உறுதிசெய்யலாம் மற்றும் அதற்கேற்ப அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையையும் திருத்தலாம். அனைத்து காலி பணியிடங்களும் விரைவாக நிரப்பப்படலாம்
- தரம் உயர்த்தப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே நேரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் பணி ஆட்களை வழங்குவதை அரசு உறுதி செய்யலாம் மற்றும் குறைந்தச் தரமுள்ள கட்டுமானங்களைத் தடுக்க கட்டுமானப் பணிகளின் தரத்தையும் கண்காணிக்கலாம்.
- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் ஸ்வச் பாரத் ஆகியவற்றின் கீழ், நிதியைப் பயன்படுத்தி அனைத்துப் பள்ளிகளிலும் போதிய கழிப்பறை வசதிகள் இருப்பதை அரசு உறுதி செய்யலாம்.

# அத்தியாயம் V

# கல்வி வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள்

## அத்தியாயம் V

## கல்வி வளர்ச்சிக்கான நலத்திட்டங்கள்

### 5.1 மாணவர்களை பள்ளியில் தக்கவைப்பதை உறுதி செய்வதற்கான திட்டங்கள்

உதவித்தொகை, விருதுகள் போன்ற ஊக்கத் திட்டங்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்விகளில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் தக்கவைப்பை அதிகரிக்க உதவுகின்றன. இத்தகைய திட்டங்கள், சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தொடர்ந்து படிக்க அனுமதிக்கும் வகையில் ஊக்கப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இத்திட்டங்களின் செயல்திறன் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்படுகிறது.

#### 5.1.1 வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும், விபத்தில் வருவாய் ஈட்டும் பெற்றோரை (தந்தை அல்லது தாய்) இழந்த அல்லது அப்பெற்றோர் நிரந்தரமாக ஊனமுற்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனத்தில்[1] (TamilNadu power Finance Corporation- TNPFC) நிலையான வைப்புத்தொகை (FD) மூலம் GoTN ₹ 75,000 நிதி உதவி வழங்குகிறது. திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, வைப்புத் தொகையானது மாணவர் மற்றும் உயிருடன் இருக்கும் பெற்றோர்/பாதுகாவலர் ஆகியோரின் கூட்டுக் கணக்கில் வைக்கப்பட வேண்டும் மற்றும் கீழே **அட்டவணை 5.1**ல். கொடுக்கப்பட்டுள்ளபடி பள்ளி/கல்லூரி அளவிலான கல்வியைத் தொடரும்போது முதிர்வுத் தொகை மாணவர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும்.

**அட்டவணை 5.1: நிதி உதவியை வெளியிடுவதற்கான வழிகாட்டுநெறிமுறைகள்**

| நிலை | தவணைகளின் எண்ணிக்கை | வெளியீட்டு நேரம் |
|---|---|---|
| மாணவர் உயர்கல்வியைத் தொடர்கிறார் | 3 அல்லது 4 | ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் நிறுவனத்திடம் இருந்து தகுதிச் சான்றிதழைப் பெற்ற பிறகு. |
| கல்வியை நிறுத்திவிட்ட மாணவர் | 1 | 12+3 வருடக் கல்வியை நிறைவு செய்யும் பட்சத்தில், எதிர்பார்க்கப்படும் காலகட்டம் முடிந்தவுடன். |
| மாணவர் பள்ளிக் கல்வியை முடித்துவிட்டார். மேற்படிப்பு மேற்கொள்ளவில்லை | 1 | பள்ளிக் கல்வி முடிந்து மூன்றாண்டுகளுக்கு பிறகு |

(ஆதாரம்: அரசு ஆணை)

2016-21ஆம் ஆண்டில், GoTN ஒவ்வொரு ஆண்டும்[2] ₹ 2.70 கோடி ஒதுக்கீடு செய்தது, இது 360 மாணவர்களுக்கு மட்டுமே உதவி வழங்க போதுமானதாக இருந்தது. அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் உதவி வழங்க வழங்கப்பட்ட

---

[1] GoTNன் பொதுத்துறை நிறுவனம்.
[2] 2017-18ஆம் ஆண்டைத் தவிர, இதில் ₹ 3.50 கோடி ஒதுக்கப்பட்டது.

நிதி போதுமானதாக இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது, எனவே முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் பெயரில் FDகள் வழங்கப்பட்டன. அக்டோபர் 2021 நிலவரப்படி, **அட்டவணை 5.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, நிதி இல்லாததன் காரணத்தால், 1,753 அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள், FD வழங்குவதற்கு நிலுவையில் உள்ளன

**அட்டவணை 5.2: வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் நிலை**

(₹ கோடியில்)

| ஆண்டு | நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தேவைப்படும் தொகை |
|---|---|---|
| 2016-17 | 548 | 4.11 |
| 2017-18 | 477 | 2.39 |
| 2018-19 | 550 | 3.88 |
| 2019-20 | 1,097 | 7.28 |
| 2020-21 | 1,753 | 12.02 |

(ஆதாரம்: CSE ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- உதவி தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்கான எந்த குறிப்பும் இல்லாததால், நிதி ஒதுக்கீடு காலம் முழுவதுமே ஒரே அளவாகவே இருந்தது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லாததால், நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றன.
- 2020-21ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட விண்ணப்பங்களில், மார்ச் 2021 நிலவரப்படி, 20 வயதை எட்டிய 57 மாணவர்களுக்கு FD உருவாக்கப்பட்டது. மேலும், நிலுவையில் உள்ள 1,753 விண்ணப்பங்களில், 269 விண்ணப்பங்கள், மார்ச் 2021 நிலவரப்படி, 20 வயதை எட்டிய மாணவர்களுக்கானது. பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வியை முடிப்பதற்கான இயல்பான வயதைத் தாண்டிய மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவது, மாணவர்களுக்கு திட்டப் பலன்களை மறுப்பதாக அமையும்.
- மேலும், இக்கட்டான சூழ்நிலையிலும் மாணவர் தனது கல்வியைத் தொடர்வதற்கான ஆதரவை வழங்குவதற்கான உத்தேச நோக்கத்தை முறியடிக்கும் வகையில், திட்ட வழிகாட்டுதல்களுக்கு எதிராக, மாணவர்களுக்கு ஒரே தொகுப்பாக முதிர்வுத் தொகை வழங்கப்பட்டது.

20 வயதைத் தாண்டிய மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது திட்டத்தின் நோக்கத்தை முறியடிப்பதாக தணிக்கை கண்டறிந்தது.

நடப்பு ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்க இது உதவும் என்றும் அரசு தெரிவித்துள்ளது (மே 2022).

### 5.1.2 'கல்வி வளர்ச்சி தினம்' விருதுகளுக்கான நிதி அளிக்காதது

தமிழகத்தின் முன்னாள் முதல்வர், பெருந்தலைவர், கே.காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15-ஆம் தேதியை, 'கல்வி வளர்ச்சி தினமாக' GoTN கொண்டாடுகிறது. 'கல்வி வளர்ச்சி தினத்தில்' மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த GHSS மற்றும் GHSக்கு முறையே ₹ 1,00,000 மற்றும் ₹ 75,000 ரொக்கப் பரிசை GoTN வழங்குகிறது.

விருதுத் தொகையை[3] பட்ஜெட் மூலம் GoTN அளிக்கிறது. 2016-17 மற்றும் 2018-19ஆம் ஆண்டுகளில், GoTN ₹ 28.00 இலட்சம் நிதி வழங்குதலுக்கான அனுமதி வழங்கியது.இது விருதுத் தொகையில் 50 விழுக்காடு ஆகும். மீதமுள்ள 50 விழுக்காடு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் (Parent Teachers Association - PTA) நிதியில் இருந்து செலவழிக்கப்பட வேண்டும். இது பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தவுடன் திருப்பிக் கொடுக்கப்படும். மாவட்டங்கள் PTA நிதியைப் பயன்படுத்தி, அதைத் திருப்புகை செய்யுமாறு கோரியிருந்தாலும், மேற்கூறிய ஆண்டுகளுக்கான திருப்புகைத் தொகையை இன்று (ஜனவரி 2022) வரை அரசு அளிக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. திருப்புகைகளை இதுவரை செலுத்ததப்படாததற்கான காரணங்கள் பதிவுகளில் இல்லை.

PTA நிதியில் இருந்து செலவழிக்கப்பட்ட விருதிற்கானத் தொகை திரும்பக் கொடுக்கப்படாததால், பள்ளிகளின் அந்தந்த PTA மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள்ப்படுவதற்கான நிதியில் பற்றாக்குறை ஏற்படும்.

பெரும்பாலான ஆண்டுகளில் அரசு அத்தொகையை திருப்புகை செய்திருப்பதாக அரசு பதிலளித்தது (ஆகஸ்ட் 2022).

### 5.1.3 மாணவர்களுக்கான 'காமராஜர் விருது திட்டம்'

தமிழ் வழியில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளை முடித்த மாணவர்கள், கல்வியில் மேன்மையாக விளங்குபவர்கள் மற்றும் பிற செயல்பாடுகளில், ஒட்டுமொத்த செயல்திறனில் சிறந்து விளங்குபவர்களுக்கு காமராஜர் விருது வழங்கும் ஊக்கத் திட்டத்தை, ஆகஸ்ட் 2017ல், GoTN அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், மாணவர்களின் ஒட்டு மொத்த குணங்களை மேம்படுத்தும் பொருட்டும், கலை, இலக்கியம், விளையாட்டு, அறிவியல் கண்காட்சிகள் மற்றும் பயிலரங்குகள், NCC, NSS, இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (Youth Red Cross - YRC) ஆகியவற்றில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டும், கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்விச் சாராத செயல்பாடுகளுக்கு 60:40 என்ற விகிதத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, CEOஐ தலைவராகவும், DEOக்கள், GHS/GHSSன் HMகள் மற்றும் கல்வியாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

2017-18ஆம் ஆண்டில் ஐந்து மாதிரி மாவட்டங்களிலும்[4], 2018-19ஆம் ஆண்டில் மேலும் ஐந்து மாவட்டங்களிலும்[5], தலைமை நிர்வாக அதிகாரிகள் 10 மற்றும்

---

3 32 மாவட்டங்களுக்கு தலா ₹ 1.75 இலட்சம்.

4 (i) கன்னியாகுமரி, (ii) தஞ்சாவூர், (iii) திருச்சிராப்பள்ளி, (iv) திருநெல்வேலி மற்றும் (v) உதகமண்டலம்.

5 (i) திண்டுக்கல், (ii) பெரம்பலூர், (iii) இராமநாதபுரம், (iv) சிவகங்கை மற்றும் (v) திருநெல்வேலி.

12ஆம் வகுப்புத் தேர்வுகளில் கல்வி மதிப்பெண்ணை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளனர் மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்திறனைக் கருத்தில் கொள்ளவில்லை என்பது பதிவுகளை ஆய்வு செய்ததில் கண்டறியப்பட்டது. இது திட்ட வழிகாட்டுதல்களை மீறி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2018-19ஆம் ஆண்டிற்கான விருது வழங்குதலில், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரிந்துரையில், கல்வி மதிப்பெண்கள் மற்றும் பாடநெறி நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் பரிந்துரைக்கப்பட்டவை. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில் GoTN ஆல் வெளியிடப்பட்ட விருதுத் தொகை, மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டது.

மாணவர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை உறுதி செய்யாமலும், திட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமலும், விருதுகளை விநியோகிப்பது முழுமையாக கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தை முறியடிப்பதாகின்றது.

### 5.1.4 ‘தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப்படிப்புதவித் தொகை தேர்வு திட்டத்தில்’ இருந்து விடுபட்ட மாணவர்கள்

‘தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப்படிப்புதவித் தொகை தேர்வு திட்டம் (National Means-cum-Merit Scholarship Scheme - NMMSS)’ என்பது மத்திய அரசின் நிதியுதவித் திட்டமாகும், இது பொருளாதாரரீதியாக பின் தங்கியுள்ள பிரிவைச் சேர்ந்த[6], திறமையான மாணவர்களுக்கு, 8ஆம் வகுப்பில் இடைநிறுத்தப்படுவதைத் தடுத்து, உயர்நிலைப் படிப்பைத் தொடர, ஊக்குவிப்பதற்காக ஆண்டுக்கு ₹ 12,000 உதவித்தொகை வழங்குகிறது.

கல்வி உதவித்தொகைக்கான மாணவர்கள், மாநில அரசு நடத்தும் தேர்வு[7] மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். கல்வி உதவித்தொகையானது, காலாண்டு அடிப்படையில் மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்பட்டது. GoIன் கல்வி அமைச்சகம், மாநில அரசு அனுப்பும் முன்மொழிவுகளை ஆய்வு செய்த பிறகு, மாணவர்களுக்கு அவர்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தும் பொருட்டு, நிதிக்கான ஒப்புதல் அளித்து, திட்டத்தைச் செயல்படுத்தும் வங்கியான, பாரத ஸ்டேட் வங்கிக்கு (State Bank of India - SBI) தொகையை வழங்கும்.

**அட்டவணை 5.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, மாணவர்களுக்கு மிக அதிக எண்ணிக்கையிலான பணம் செலுத்துதல்கள் தோல்வியடைந்ததை தணிக்கை கண்டறிந்தது.

---

6 அனைத்து மூலங்களிலிருந்தும் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ₹ 1.5 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

7 தேர்வில் கலந்துகொள்வதற்கு 7ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 55 விழுக்காடு மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் உதவித்தொகையைத் தொடர 8 மற்றும் 9ஆம் வகுப்புகளில் 55 விழுக்காடு மதிப்பெண்கள் மற்றும் 10ஆம் வகுப்பில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

**அட்டவணை 5.2: NMMSன் கீழ் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட மற்றும் தோல்வியடைந்த கட்டணங்களின் விவரங்கள்**

| கல்வி ஆண்டு | திட்ட ஆண்டு | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | செலுத்தம் | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பளிப்பு அளிக்கப்-பட்ட | செலுத்தம் தோல்வியுற்ற (விழுக்காடு) |
| 2014-15 (வகுப்பு 12) | புதிய 2012-13 | 5,614 | 4,748 | 866 (*18.24*) |
| 2015-16 (வகுப்பு 11) | புதிய 2013-14 | 5,942 | 4,848 | 1,094 (*22.57*) |
| 2016-17 (வகுப்பு 10) | புதிய 2014-15 | 6,477 | 5,789 | 688 (*11.89*) |
| மொத்தம் | | | | **2,648** |

(ஆதாரம்: CSE ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

பணம் கிடைக்கத் தவறிய 2,648 மாணவர்கள், 2012-13 முதல் 2014-15 வரையிலான திட்ட ஆண்டுகளைச் (project years) சேர்ந்தவர்கள மற்றும், 2015-16 முதல் 2018-19 வரையிலான ஆண்டுகளில், 12ஆம் வகுப்பை முடித்திருப்பார்கள். இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தணிக்கையின் கேள்விக்கு, 19 மாவட்டங்களில் திருத்தப்பட்ட வங்கிக் கணக்குத் தரவுகள் இன்னும் தொகுக்கப்படவில்லை என்று அரசு பதிலளித்தது (ஜனவரி 2022).

இந்த உதவித்தொகை நலிந்த பிரிவைச் சேர்ந்த திறமையான மாணவர்களின் இடைநிற்றலைக் கட்டுப்படுத்தும் வகையில் இருந்ததால், அது மாணவர்களின் வங்கிக் கணக்கை சரியான நேரத்தில் சென்றடைவது மிக மிக முக்கியமானது. 2,648 மாணவர்களின் திருத்தப்பட்ட வங்கி விவரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமை, உதவித்தொகை தேவைப்படும் மாணவர்களுக்கு, உரிய நேரத்திற்கான பலனை தவிர்த்ததாக அமைந்தது.

### 5.1.5 ‘தமிழ்நாடு கிராமப்புற மாணவர்களின் திறமைத் தேடல் திட்டத்திற்கு’ போதிய நிதியளிப்பு இல்லை

தமிழ்நாடு கிராமப்புற மாணவர் திறன் தேடல் (Tamil Nadu Rural Students Talent Search - TRUST) திட்டத்தின் கீழ் அரசு தேர்வுகள் இயக்குனரால் நடத்தப்படும் திறமையைக் கண்டறியும் பொருட்டு நடத்தப்படும் தேர்வின் அடிப்படையில், கிராமப்புறங்களில் அமைந்துள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, GoTN, உதவித்தொகை வழங்குகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ₹ 1,00,000-க்கு மிகாமல் இருக்கும் மாணவர்கள் இத்தேர்வில் பங்கேற்கத் தகுதி பெறுவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் முதல் 50 மாணவர் மற்றும் 50 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் 12ஆம் வகுப்பு முடிக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் உதவித்தொகையாக ₹ 1,000 வழங்கப்படும்.

9 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும், இத்திட்டத்தில தேர்வான மாணவர்களுக்கு, விருது வழங்க, ஆண்டுதோறும் GoTN ₹ 1.24 கோடி[8] வழங்க வேண்டும் என தணிக்கை கணக்கிட்டது. ஆனால், 2016-21ம் ஆண்டு காலக்கட்டத்தில், GoTN, ₹ 1.13 கோடி மட்டுமே ஒதுக்கியது. இதற்கான அடிப்படை எதுவும் பதிவு

8 ₹ 1,000 x 100 மாணவர்கள் x 4 வகுப்புகள் (9 முதல் 12 வரை) x 31 மாவட்டங்கள் (மார்ச் 2021 நிலவரப்படி சென்னையின் நகர்ப்புற மாவட்டத்தைத் தவிர).

செய்யப்படவில்லை. இதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் ₹ 0.11 கோடி குறைவாக வழங்கப்படுவதால், தகுதியுள்ள அனைத்து மாணவர்களும் பயனடையவில்லை.

இவ்வாறு, வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டில் உள்ள குறைபாடு, தெரிவு செய்யப்பட்ட கிராமப்புற மாணவர்கள், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பயனடைவதில் பாதிக்கப்பட்டதன் மூலம் இந்தத் திட்டம் தோல்வியடைந்தது.

**பள்ளி சேர்க்கையை ஊக்குவிக்கும் பொருட்டும் இடைநிற்றலை குறைக்கும் பொருட்டும், GoTN செயல்படுத்திய நலத்திட்டங்கள், தெளிவான குறிக்கோளுடன் செயல்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளாக இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தப்பட்ட போதிலும், குறைவான நிதி ஒதுக்கீடு, திட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றாதது மற்றும் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் போன்ற சிக்கல்கள் இலக்கை அடைவதைப் பாதித்தன.**

## 5.2 மாணவர்களின் நலனுக்காக இலவசமாக பொருட்களை வழங்குதல்

GoTN ஆல் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களில் விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், மிதிவண்டிகள், சீருடைகள், காலணிகள் போன்றவற்றை வழங்குவதற்கான திட்டங்கள் அடங்கும். குறிப்பிடப்பட்ட விலையில்லா பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டுள்ள கொள்முதல் முகமைகள் **அட்டவணை 5.3**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.3: இலவசப் பொருட்களைக் கொள்முதல் செய்வதில் ஈடுபட்டுள்ள கொள்முதல் முகமைகளின் விவரங்கள்**

| வ.எண் | இலவசப் பொருட்களின் பெயர் | கொள்முதல் செய்வதில் ஈடுபட்டுள்ள கொள்முதல் முகமைகளின் பெயர் |
|---|---|---|
| 1 | பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், காலணி, பள்ளிப் பைகள், சீருடைகள், கல்விக் கருவிகள் | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகம் (TamilNadu TextBook and Educational Services Corporation - TNTBESC) |
| 2 | மிதிவண்டிகள் | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம் (Commissionerate of Backward Classes Welfare - CBCW) |
| 3 | மடிக்கணினி | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu Limited - ELCOT) |

(ஆதாரம்: அரசு ஆணை)

கல்வி மேலாண்மை மற்றும் தகவல் அமைப்பு (Educational Management and Information System - EMIS) மூலம் மேற்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 5.2.1 தகுதியுள்ள மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்காமை

2011-12 முதல், GHSSல் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் கணினி திறன்களை மேம்படுத்துவதற்கு வசதியாக மடிக்கணினிகளை இலவசமாக வழங்கும் திட்டத்தை GoTN செயல்படுத்துகிறது. 2017-18 வரை, GoTN 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கியது மற்றும் 2018-19ஆம் ஆண்டு முதல் 11ஆம் வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது.

2017-21ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட வேண்டிய, உண்மையில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மடிக்கணினிகளின் எண்ணிக்கை **அட்டவணை 5.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.4: மடிக்கணினிகளின் தேவை, கொள்முதல் மற்றும் வழங்குகை**

**(எண்ணிக்கை இலட்சத்தில்)**

| ஆண்டு | மாணவர் பயிலும் வகுப்பு | தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை | கொள்முதல் செய்யப்பட்ட மடிக்கணினிகள் | | வழங்கப்பட்ட மடிக்கணினிகள் | | மீதமுள்ள மடிக்கணினிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மாதம் | எண்ணிக்கை | மாதம் | எண்ணிக்கை | |
| 2017-18 | 12 | 3.79 | ஜனவரி 2018 | 0.60 | மே 2018 ஆகஸ்ட் 2019 | 1.47 | 0.55 |
| 2018-19 | 12 | 5.17 | ஜனவரி 2019 | 14.78 | ஆகஸ்ட் 2019 | 4.08 | |
| 2019-20 | 11 | 4.93 | | | ஆகஸ்ட் 2019 | 4.72 | |
| | 12 | 4.71 | | | அக்டோபர் 2019 | 4.56 | |
| 2020-21 | 11 | ஜூன் 2022 நிலவரப்படி இத்திட்டம் இன்னும் செயல்படுத்தப்படவில்லை | | | | | |
| | 12 | | | | | | |
| மொத்தம் | | 18.60 | | 15.38 | | 14.83 | 0.55 |

(ஆதாரம் : CSE மற்றும் ELCOTல் இருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்து தொகுப்பட்டது)

இந்தத் திட்டத்தின் செயல்பாட்டைக் குறித்த தணிக்கை ஆய்வானது, CSE மற்றும் GoTN, மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்கும், வழங்குவதற்கும் எந்த காலமுறையையும் பின்பற்றவில்லை என்பதை வெளிப்படுத்தியது. முன்மொழிவை சரியான நேரத்தில் CSE தயாரிக்காதது, கீழே விவரிக்கப்பட்டபடி, இத்திட்டம் ஒழுங்கற்ற முறையில் செயல்படுத்தலுக்கும் அதன் குறைவான பயனளித்தலுக்கும் வழிவகுத்தது.

- இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் கணினித் திறனை வளர்க்கும் பொருட்டு அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தாலும், 2017-20ஆம் ஆண்டில் 14.83 இலட்சம் மாணவர்கள் (80 விழுக்காடு) மட்டுமே பள்ளியில் படிக்கும் போது மடிக்கணினிகளைப் பெற்றுள்ளனர்.
- 2017-18ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 2.32 இலட்சம் மாணவர்கள், பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு முன்பாக மடிக்கணினிகளைப் பெறவில்லை. இது பள்ளி மாணவர்களின் கணினித் திறனை மேம்படுத்தும் திட்டத்தின் நோக்கத்தை முறியடித்தது.
- ஜூன் 2019ல், தற்போது 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டது, இதனால் ஏற்கனவே 12ஆம் வகுப்பை முடித்த

மாணவர்களுக்கு குறைந்தபட்ச முன்னுரிமை வழங்கப்படும். 2017-18 மற்றும் 2018-19ஆம் ஆண்டுகளில் பள்ளிப் படிப்பை முடித்து மேற்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு மட்டுமே மடிக்கணினிகளை வழங்க 2019 நவம்பரில் GoTN உத்தரவிட்டது. இருப்பினும், 1.35 இலட்சம் மாணவர்களுக்கு, ஏற்கனவே அவர்கள் உயர்கல்வி மேற்கொள்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தாமல் மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருந்தன.

- 2017-18ஆம் ஆண்டு போட்டித் தேர்வு (competitive exam) எழுதும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட வேண்டிய அவசரத் தேவையைச் சுட்டிக்காட்டி, அரசின் உத்தரவின் அடிப்படையில், ELCOT நிறுவனம், 2018 ஜனவரியில் 60,000 மடிக்கணினிகளை, முந்தைய ஆண்டு விலையான, ஒரு மடிக்கணினிக்கு ₹ 12,370 என்ற வீதத்தில் கொள்முதல் செய்தது. ஆயினும், கொள்முதல் செய்யப்பட்ட 60,000 மடிக்கணினிகளில் 8,079 மடிக்கணினிகள் மட்டுமே போட்டித் தேர்வு எழுதும் தகுதியுள்ள மாணவர்களுக்கும், மீதமுள்ள 51,921 மடிக்கணினிகள் மற்ற மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது.
- 55,000 மடிக்கணினிகள் இருப்பில் இருந்தபோதிலும், தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்க எந்த நடவடிக்கையையும் CSE மேற்கொள்ளவில்லை. மின்கலத்தின் (battery) உத்திரவாதம் (warranty) ஏற்கனவே ஆகஸ்ட் 2020ல் காலாவதியாகி விட்டது, மேலும் மடிக்கணினியின் உத்திரவாதம் ஆகஸ்ட் 2022ல் காலாவதியாகிவிடும். மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்படாத மடிக்கணினிகளின் மதிப்பான ₹ 68.51 கோடி பயன்படுத்தப்படாமல் முடக்கப்பட்டது.

இதனால், பள்ளிகளின் தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் கணினி திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதில் இத்திட்டத்தின் செயல்பாடானது பயனற்றதாக இருந்தது.

2017-18ஆம் ஆண்டுக்கான அனைத்து தகுதியான மாணவர்களுக்கும் மடிக்கணினிகளின் இருப்பு போதுமானதாக இல்லாததால், அவை இருப்பில் வைக்கப்பட்டு, சிறந்த முறையில் பயன்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது (மே 2022). இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் எதிர்நோக்கப்படுகிறது (செப்டம்பர் 2022). இந்த மடிக்கணினிகளின் உத்தரவாதக் காலம் காலாவதியாகிவிட்டதால், இக்கணினிகளின் எந்தவொரு சேவைக்கான தேவையும், அரசிற்கு கூடுதல் மற்றும் தேவையற்ற செலவுகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

### 5.2.2 இலவசமாக வழங்கப்படும் பொருட்களின் இருப்பைக் கருத்தில் கொள்ளாதது

#### *(அ) பாதணிகள் கிடப்பில் இருப்பதால் ₹ 5.47 கோடி வீண் செலவினம்*

2019-20ஆம் ஆண்டு வரை அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் GoTN இலவச பாதணிகளை வழங்கி வருகிறது. நவம்பர் 2019ல், 2020-21ஆம் ஆண்டு முதல் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு

பாதணிகளுக்குப் பதிலாக ஒரு ஜோடி காலணிகள் (shoes) மற்றும் இரண்டு ஜோடி காலுறைகள் (socks) வழங்குவது என இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. TNTBESCல் இருந்து பெறப்பட்ட, மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மற்றும் 2016-17 முதல் 2019-20 வரையிலான ஆண்டுகளில் இருப்பில் உள்ள காலணிகளின் விவரங்கள் **அட்டவணை 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.5: 2016-20 ஆண்டுகளில் கோரப்பட்ட, பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட பாதணிகளின் விவரங்கள்**

| ஆண்டு | தொடக்க மீத இருப்பு | பெறப்பட்ட பாதணிகளின் எண்ணிக்கை | மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாதணிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தேதி | இறுதி மீத இருப்பு |
|---|---|---|---|---|---|
| 2016-17 | 46,599 | 24,39,255 | 23,95,283 | 06/2017 | 90,571 |
| 2017-18 | 90,571 | 22,09,879 | 21,21,557 | 08/2018 | 1,78,893 |
| 2018-19 | 1,78,893 | 22,30,240 | 22,00,924 | 07/2019 | 2,08,209 |
| 2019-20 | 2,08,209 | 23,97,017 | 22,58,708 | 08/2020 | 3,46,518 |

(ஆதாரம்: CSEன் பதிவுகளில் இருந்து தொகுக்கப்பட்ட விவரம்)

தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- இருப்பில் உள்ள இலவசப் பொருட்களை கருத்தில் கொண்டே, தேவையினை கணக்கிட வேண்டும் என்று அரசால் வழங்கப்பட்ட நெறிமுறைகள் (ஜூலை 2018) வழிநடத்தியபோதிலும், CSE, பள்ளிகளில் உள்ள இருப்பைக் கருத்தில் கொள்ளாமல் TNTBESCக்கு தேவையினைத் தொடர்ந்து சமர்பித்தது. மாவட்டங்களின் CEO/DEO க்களிடம் இருந்து பெறப்பட்ட விவரங்களில், ஒவ்வொரு கல்வியாண்டிலும், அந்தந்த ஆண்டின் தொடக்க மீத இருப்பையும் (opening balance) மற்றும் இறுதி மீத இருப்பையும் (closing balance) பற்றிய விவரங்களைக் குறிப்பிடுவதற்கான வழிமுறைகள் இல்லை என்பதையும், இதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் இறுதி இருப்புகள் குவிக்கப்படுவதையும் தணிக்கை கண்டறிந்தது.
- பதிவுசெய்யப்பட்ட மாணவர்களைப் பற்றிய தகவல்கள் EMISல் உடனடியாகக் கிடைத்தாலும், அவை கொள்முதல் மற்றும் விநியோகத்திற்கு திறம்பட பயன்படுத்தப்படாததால் பாதணி வழங்கல் தாமதமானது.

பல ஆண்டுகளாகத் துறையால் முறையான வழிமுறை மற்றும் கண்காணிப்பு பின்பற்றப்படாததால், ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும், இலவச பாதணிகளின் இறுதி மீத இருப்புகள் முறையே, 2016-17ல் 0.91 இலட்சத்தில் இருந்து 2019-20ல் 3.46 இலட்சமாக அதிகரித்தது. இதன் விளைவாக, 2020-21ஆம் ஆண்டிலிருந்து இலவச பாதணிகள் வழங்கும் திட்டத்தை காலணிகள் வழங்கும் திட்டமாக அரசு மாற்றியமைத்தபோது, 2019-20ஆம் ஆண்டின் இறுதியில், 3.46 இலட்சம் பாதணிகள் எந்தப் பயனும் இல்லாமல் துறையிடமே கிடப்பில் உள்ளது. இது இறுதியில் ₹ 5.47 கோடி[9] வீண் செலவுக்கு வழிவகுத்தது.

திட்டத்தின் மீதான குறைபாடு வீண் செலவுக்கு வழிவகுத்திருப்பதை அரசு ஏற்றுக்கொண்டது (மே 2022).

[9] 3.46 இலட்சம் காலணி x ₹ 157.97 (குறைந்தபட்ச விலை).

### (ஆ) பள்ளிப் பைகளை அதிகமாக வாங்குதல்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் GoTN பள்ளிப் பைகளை (school bags) இலவசமாக வழங்குகிறது. 2016-21 வரையிலான காலகட்டத்தில் பள்ளிப் பைகள் விநியோகம் செய்யப்பட்ட விவரங்கள் **அட்டவணை 5.6**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.6: 2016-21 வரையிலான ஆண்டுகளில் பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட பள்ளிப் பைகளின் விவரங்கள்**

| ஆண்டு | தொடக்க இருப்புக்கள்/OB | மாணவர்கள் எண்ணிக்கை / கோரப்பட்ட அளவு | பெறப்பட்ட பள்ளிப் பைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பைகள் | பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட காலம் | இறுதி இருப்புக்கள்/CB |
|---|---|---|---|---|---|---|
| 2016-17 | 47,450 | 44,10,972 | 35,14,029 | 33,77,101 | 01/ 2017 முதல் 11/ 2017 வரை | 1,84,378 |
| 2017-18 | 1,84,378 | 37,90,252 | 31,14,352 | 30,85,054 | 01/ 2018 முதல் 08/ 2018 வரை | 2,13,676 |
| 2018-19 | 2,13,676 | 40,01,444 | 31,93,256 | 30,65,291 | 03/ 2019 முதல் 02/ 2020 வரை | 3,41,641 |
| 2019-20 | 3,41,641 | 42,17,945 | 33,81,200 | 31,37,493 | 06/ 2020 முதல் 07/ 2020 வரை | 5,85,348 |
| 2020-21 | 5,85,348 | 36,44,808 | 29,47,187 | 30,44,047 | 09/ 2021 | 4,88,488 |

(ஆதாரம்: CSEயின் பதிவுகளில் இருந்து தொகுக்கப்பட்ட தரவு)

முந்தைய ஆண்டின் (2018-19) இறுதி மீத இருப்புகளைக் கருத்தில் கொண்டு, 2019-20ஆம் ஆண்டிற்கான சரியான மாணவர் எண்ணிக்கை/ பள்ளிப் பைகளின் தேவையை வழங்குமாறு அனைத்து CEO களுக்கும் CSE அறிவுறுத்தினார் (ஜூலை 2019). ஆனால், அத்தகைய விவரங்கள் CEOகளால் சமர்ப்பிக்கப்படவில்லை. இறுதி மீத இருப்பின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, CSEன் அறிவுறுத்தல் பின்பற்றப்படவில்லை என்பதைக் குறிக்கிறது.

EMISல் விவரங்கள் இருந்தாலும், தேவைகளை தவறாக தொகுத்ததால், 4.88 இலட்சம் பள்ளி பைகள் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டு, அரசு நிதி ₹ 7.28 கோடி[10] முடக்கப்பட்டது.

எந்த ஒரு குழந்தையும் இலவசப் பள்ளிப்பையை இழக்காமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, கூடுதல் தேவைக்காக, EMISல் இருந்து பெறப்படும் மாணவர் எண்ணிக்கையுடன் ஐந்து விழுக்காடு அதிகமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று அரசு பதிலளித்தது (ஆகஸ்ட் 2022). இருப்பினும், 2016-21 வரையிலான ஆண்டுகளில், விநியோகிக்கப்பட்ட பள்ளிப் பைகளின் எண்ணிக்கை மற்றும் கோரப்பட்ட எண்ணிக்கை (indented quantities)ஆகியவற்றுக்கு இடையேயான மாறுபாடு 16 முதல் 26 விழுக்காடு வரை இருந்ததை தணிக்கை கண்டறிந்தது. மேலும், பல ஆண்டுகளாக அரசுப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதால், அடுத்த ஆண்டுக்கான தேவைக்கு, தற்போதைய மாணவர் எண்ணிக்கையைவிட ஐந்து விழுக்காடு கூடுதலாகச் சேர்ப்பது எந்த விதத்திலும் இச்செயலுக்குத் தொடர்புடையதாக இருக்கவில்லை.

[10] 4.88 இலட்சம் பள்ளிப் பைகள் x ₹ 149.27 (குறைந்தபட்ச விலை).

## 5.3 முடிவுரை

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைத் தக்கவைக்க அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. 2020-21ஆம் ஆண்டில் மொத்தம் ₹ 2,400.63 கோடி செலவழித்த இந்தத் திட்டங்களின் செயலாக்கம், அனைத்து மட்டங்களிலும் திறமையற்ற செயலாக்கத்தால் பாதிக்கப்பட்டது. வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம் (Bread Winner Scheme) திட்டம் மற்றும் 'தமிழ்நாடு கிராமப்புற மாணவர்களின் திறமைத் தேடல்' (TRUST Scheme) திட்டம் ஆகியவற்றிற்கு போதிய நிதி வழங்காதது மற்றும் காமராஜர் விருது வழங்கும் திட்டத்தை தவறான முறையில் செயல்படுத்தியது ஆகியவை இத்திட்டங்களை செயலிழக்கச் செய்தது. EMISல் ஏற்கனவே உள்ள தரவுகளை ஏற்காமல், இலவச மடிக்கணினி, காலணி மற்றும் பள்ளி பைகள் வழங்கும் திட்டத்தை கவனக்குறைவாக செயல்படுத்தியதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் முறையே இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு இலவசப் பொருட்கள் வழங்குவதில் தாமதம், வீண் செலவுகள் மற்றும் தேவையற்ற நிதி முடக்கம் போன்றவை ஏற்பட்டன.

## 5.4 பரிந்துரைகள்

- திட்டப் பலன்களை மாணவர்களுக்கு வழங்குவதில் தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம் மற்றும் காமராஜர் விருது வழங்கும் திட்டத்திற்கு போதுமான நிதி ஒதுக்கீட்டை அரசு உறுதி செய்யலாம்,

- இலவச மடிக்கணினித் திட்டம் மற்றும் காலணி மற்றும் பள்ளிப் பைகள் வழங்குவதற்கான திட்டங்கள் முறையாக விநியோகிக்கப்படுதலை கண்காணிக்கப்படுவதை அரசு உறுதி செய்யலாம்.

# அத்தியாயம் VI

# கண்காணிப்பு

# அத்தியாயம் VI

## கண்காணிப்பு

மாநிலத்தில் பள்ளிகளின் பெருந்தொடர் அமைவின் (large network of schools) காரணமாகக் கண்காணிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. பள்ளிகள் மற்றும் கள அளவிலான அலுவலகங்கள் மூலம் காலமுறை அறிக்கைகள் (periodical reports) சமர்ப்பிக்கப்படுதல், துறை அதிகாரிகளால் பள்ளிகள் ஆய்வு செய்யப்படுதல் மற்றும் இணைய அடிப்படையிலான UDISE ஆகியவற்றை உள்ளடக்கிய கண்காணிப்பு முறையை CSE அமைத்துள்ளது. கண்காணிப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் துறையின் செயல்திறனில் அதன் தாக்கம் ஆகியவை இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்படுகின்றன.

## 6.1 அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதைக் கண்காணிப்பதில் உள்ள குறைபாடுகள்

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைகள்) சட்டம், 1973 இன் பிரிவு 8(6)ன் படி (Tamil Nadu Recognised Private Schools Regulations) Act, 1973 அங்கீகாரச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், அங்கீகாரக் காலம் முடிவடையும் தேதிக்கு முன், மூன்று மாதங்களுக்குள் அதற்குரிய கட்டணம் செலுத்தி மற்றும் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், பிரிவு 8(7)ன் படி, அங்கீகரிக்கப்படாத எந்தப் பள்ளியிலும் குழந்தைகள் சேர்க்கப்படக்கூடாது.

மாதிரி மாவட்டங்களில், அங்கீகாரம் புதுப்பிக்கப்படாமலயே, வழிகாட்டுதல்களை மீறி, பள்ளிகளில், 2021-22 கல்வியாண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை தொடர்ந்ததை தணிக்கை கண்டறிந்தது. மார்ச் 2022 நிலவரப்படி அங்கீகாரம் புதுப்பிக்கப்படாமல் செயல்படும் பள்ளிகள் மற்றும் அவற்றின் நிலுவை நிலை பற்றிய விவரங்கள் ஆகியவை **அட்டவணை** 6.1ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1: மாதிரி மாவட்டங்களில் அங்கீகாரம் இல்லாமல் செயல்படும் பள்ளிகளின் விவரங்கள்**

| மாவட்டம் | அங்கீகாரம் புதுப்பித்தல் விண்ணப்பம் நிலுவையில் உள்ளது | | | பெரும் மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| | CEO | DEO | பள்ளி | நிலுவையில் உள்ள அங்கீகாரங்களின் எண்ணிக்கை | அங்கீகாரம் காலாவதியான பிறகு (டிசம்பர் 2021) ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள எண் |
| கோயம்புத்தூர் | 11 | 0 | 0 | 11 | 5 |
| கடலூர் | 10 | 0 | 0 | 10 | 0 |
| கரூர் | 4 | 0 | 1 | 5 | 3 |
| கிருஷ்ணகிரி | 0 | 0 | 2 | 2 | 2 |
| பெரம்பலூர் | 1 | 1 | 1 | 3 | 1 |
| ராமநாதபுரம் | 0 | 1 | 18 | 19 | 4 |
| சேலம் | 0 | 2 | 5 | 7 | 0 |
| தூத்துக்குடி | 0 | 10 | 13 | 23 | 23 |
| திருவண்ணாமலை | 21 | 0 | 2 | 23 | 16 |
| மொத்தம் | 47 | 14 | 42 | 103 | 54 |

(ஆதாரம்: அந்தந்த CEOக்கள் மற்றும் DEOக்களின் பதிவுருக்கள்)

புதுப்பித்தலைப் பொறுத்தவரை, அங்கீகாரம் காலாவதியாகும் மூன்று மாதங்களுக்கு முன்பதாக அதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், பெரும்பாலான பள்ளிகள் தங்கள் அங்கீகார காலம் முடிந்த பிறகு புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்தன மற்றும் 19 பள்ளிகளைப் பொறுத்தவரை, அங்கீகார காலம் 2019க்கு முன்பே காலாவதியானது கண்டறியப்பட்டது. கட்டிட உரிமம் (Building licence), சுகாதார சான்றிதழ் (Sanitation certificate) மற்றும் தீ பாதுகாப்பு சான்றிதழ்கள் (Fire safety certificates) போன்ற கட்டாய சான்றிதழ்களை பள்ளிகள் பெறாததே பள்ளிகள் அளவிலான புதுப்பித்தலில் உள்ள நிலுவைக்குக் காரணமாக தணிக்கை கண்டறிந்தது. இதனால் பள்ளியின் பாதுகாப்பை CSEயால் உறுதி செய்ய முடியவில்லை.

புதுப்பித்தல் விண்ணப்பங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதில் பள்ளிகளின் கண்காணிப்பு திறனற்றதாக இருப்பதையும் தணிக்கை கண்டறிந்தது. புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் பொறுப்பு அந்தந்த பள்ளிகளிடம் இருந்ததால், அது திறம்பட கண்காணிக்கப்படவில்லை என்பதுடன், இந்த பள்ளிகளின் CSE அதிகாரிகளின் ஆய்வுகளும் இந்தக் குறைபாடுகளை ஆண்டு ஆய்வு அறிக்கையில் **(பத்தி** 6.2) சுட்டிக்காட்டத் தவறிவிட்டன.

புதுப்பித்தல்கள் அங்கீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட, புதுப்பிக்கப்பட வேண்டிய தேதியிலிருந்து 1 முதல் 99 மாதங்கள் வரை தாமதத்துடன் புதுப்பித்தலுக்கான ஆணைகள் வழங்கப்பட்டன **(அட்டவணை** 6.2). இதனால், சிக்கல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், புதுப்பித்தல்கள் ஒரு வழக்கமுறையாக மட்டுமே (matter of routine) நடைமுறைப் படுத்தப்பட்டன.

**அட்டவணை 6.2: அங்கீகாரம் புதுப்பித்தல் வழங்குவதில் தாமதம்**

